இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER
இதழ் 388
சனி, 25 ஏப்ரல், 2026 | பக்கங்கள் 18
www.ilakku.org



# துணை ஜனாதிபதியின் வருகையும் தூரப் போகும் தமிழர் அபிலாசைகளும்

விதுரன்



# வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பல்கலைக்கழக அனுமதியில் கலைப்பிரிவில் தொடர் சாதனை ஏனைய துறைகளில் வீழ்ச்சி!

திரு. ந. சந்திரகுமார்




# வான் தாக்குதலில் இருந்து கடற்படை முற்றுகைக்கு ஏன் அமெரிக்கா மாறியது?

வேல்ஸில் இருந்து அருஸ்

# திருக்கோணேஸ்வரர் ஆலயப் பகுதியில் விமானப்படை ரேடார்?




திருக்கோணேஸ்வரர் ஆலய பகுதியில் இலங்கை விமானப்படையினால் ரேடார் அமைக்க இடம் கோரப்பட்டுள்ளதாகவும் இத்திட்டத்திற்கு அனைத்து மக்களும் எதிர்ப்பு வெளியிட வேண்டும் என்றும் ஆலய நம்பிக்கை பொறுப்பாளர் சபை உறுப்பினர் ஜெயசங்க வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், திருக்கோணேஸ்வரர் ஆலயமானது 247 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. இதற்கு பிரித்தானியர் ஆட்சியில் வழங்கப்பட்ட சி.வி 217 என்ற இலக்கம் கொண்ட செம்பு உறுதி இந்தியாவில் உள்ள ஆதீனம் ஒன்றில் இன்னமும் பாதுகாப்பாக இருக்கின்றது இந்நிலையில் ஆலய பகுதிகள் ஒவ்வொரு படையாலும் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

திருக்கோணேஸ்வரர் ஆலய வாசலில் இருந்த கேணி, முதலில் இராணுவத்தினரால் மூடப்பட்டது, அதனைத்தொடர்ந்து காவல்துறையினருக்கான தங்கும் விடுதிகள் அமைக்கப்பட்டன, மற்றும் நந்தி மலையில் கடற்படைக்கான தளமும் அமைக்கப்பட்டுள்ளது.

ரேடார் கருவியை சீனக்குடா பகுதியிலேயே அமைக்க முடியும். அதைவிடுத்து இங்கே அமைப்பதன் நோக்கம் என்ன என்றும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. எனவே அனைத்து திருகோணமலை மக்களும் இதற்கு எதிர்ப்பு வெளியிட்டு நில அபகரிப்பை தடுக்க வேண்டும் என்றார்.

## மட்டக்களப்பு: மீனவரை சித்திரவதை செய்த கடற்படை அதிகாரிக்கு பிணை



மட்டக்களப்பு செட்டிப்பாளையம் கடற்கரை பகுதியில் மீனவர் ஒருவரை முழங்காலில் இருத்தி, தாக்கிய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட கடற்படை அதிகாரியை ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்க, களுவாஞ்சிக்குடி நீதவான் அனுமதியளித்துள்ளார்.

அத்துடன் இந்த வழக்கை மீண்டும் விசாரணை செய்து, குற்றவியல் கோவை 1994ஆம் ஆண்டு 22இன் கீழ் முதலாம் பிரிவு சித்திரவதை தடுப்பு தண்டனைச் சட்டத்தின் கீழ் சாட்சிகள் மற்றும் சான்றுப் பொருட்களுடன் எதிர்வரும் மே மாதம் 22ஆம் திகதி வழக்குத் தாக்குல் செய்யுமாறு காவல்துறையினருக்கு அவர் உத்தரவிட்டார்.

கடந்த 5ஆம் திகதி செட்டிப்பாளையம் கடற்கரையில் கல்லடி கடற்படை முகாமைச்

தொடர்ச்சி: பக்கம் 16

## வடக்கு கிழக்கு காணி பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு காணும்: இளங்குமரன்




வடக்கு, கிழக்கில் நிலவும் காணிப் பிரச்சினைக்கு சுமூகமாக தீர்வு காணவேண்டும் என்பதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதியாக உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி, காணி உரிமையாளர்கள் மயிலிட்டி இராணுவ முகாமுக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், மயிலிட்டி பிரச்சினையும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வகையில் தீர்க்கப்படும் என இளங்குமரன் தெரிவித்தார். 1990ஆம் ஆண்டு குறித்த பிரதேசத்தில் இருந்து மக்கள் வெளியேறிய நிலையில் இராணுவம் காணிகளை கையகப்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கத்து.

## கடற்படை முற்றுகையை மீறிச்செல்லும் ஈரானிய எண்ணெய் கப்பல்கள்




அமெரிக்கக் கடற்படை முற்றுகையை மீறி, ஈரானிய எண்ணெய் கப்பல்கள் ஹோர்முஸ் வழியாகத் தொடர்ந்து செல்கிறது. பகுப்பாய்வு நிறுவனமான வோர்டெக்ஸாவின்படி, ஆய்வாளர்கள் இதை ஒரு பரந்த கடல் மண்டலத்தில் அமெரிக்கக் கடற்படையின் முற்றுகை என்று குறிப்பிட்டபோதிலும், ஏப்ரல் 13 முதல் 21 வரை சுமார் 10.7 மில்லியன் பீப்பாய் ஈரானிய கச்சா எண்ணெய் ஹோர்முஸ் ஜலசந்தி வழியாகக் கடந்து செல்கின்றன.

தடைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதில் அமெரிக்காவின் நிலைப்பாடு, அந்தக் குறுகிய ஜலசந்தியுடன் மட்டும் நின்றுவிடாமல், ஈரான்-பாகிஸ்தான் எல்லைக்கும் ஓமானின் மேற்கு கடல் எல்லைக்கும் இடையில் மேற்கே சுமார் 300 மைல்கள் வரை பரந்துள்ள ஒரு மண்டலத்திலும் நெகிழ்வாகச் செயல்படுகிறது என்று வோர்டெக்ஸா கூறியுள்ளது. இந்தக் காலகட்டத்தில், ஈரான் தொடர்பான அல்லது தடைசெய்யப்பட்ட கப்பல்கள் உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் சரக்குகளை ஏற்றிச் சென்ற 35 பயணங்களை அந்நிறுவனம் பதிவு செய்துள்ளது.

அமெரிக்கக் கடற்படையின் அதிகரித்த பிரசன்னம் மற்றும் தடைகளை அமுல்படுத்தும் முயற்சிகளுக்கு மத்தியிலும், உலகின் மிகவும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த கப்பல் போக்குவரத்து வழித்தடங்களில் ஒன்றில் ஈரானிய கடல்சார் நடவடிக்கைகள் தொடர்வதை இந்தப் புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

உலகம் அதன் வரலாற்றிலேயே எரிசக்தி பாதுகாப்பிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது. ஈரானுக்கு எதிரான போரின் காரணமாக நாம் ஒரு நாளைக்கு 13 மில்லியன் பீப்பாய் எண்ணெயை இழந்து வருகிறோம் என சர்வதேச எரிசக்தி முகமையின் (IEA) தலைவர் CNBC-க்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

## இந்தியாவும் சீனாவும் ‘நரகக் குழிகள்’ - ட்ரம்ப்



அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், இந்தியாவையும் சீனாவையும் “நரகக் குழிகள்” என்று இழிவுபடுத்தும் ஒரு கடிதத்தைப் பகிர்ந்துள்ளார். ட்ரம்ப், முன்னாள் வானொலித் தொகுப்பாளர் மைக்கேல் சாவேஜின் ‘சாவேஜ் நேஷன்’ பாட்காஸ்டில் இருந்து அந்தக் கடிதத்தை புதன்கிழமை(22) அன்று ‘ட்ரூத் சோஷியல்’ தளத்தில் மறுபதிவு செய்தார்.


அந்தப் பதிவு, அமெரிக்காவின் பிறப்புரிமைக் குடியுரிமைச் சட்டங்களை விமர்சித்ததுடன், தேசியம் தொடர்பான அமெரிக்கக் கொள்கையில் மாற்றங்களை வலுவாக வலியுறுத்தியது. அது இந்தியா, சீனா மற்றும் பிற நாடுகளை “நரகக் குழிகள்” என்று குறிப்பிட்டிருந்தது.

“இங்கே ஒரு குழந்தை பிறந்தவுடன் குடிமகனாகிறது, பின்னர் அவர்கள் சீனா, இந்தியா அல்லது இந்த கிரகத்தில் உள்ள வேறு ஏதேனும் ஒரு நரகக் குழியிலிருந்து முழு குடும்பத்தையும் அழைத்து வருகிறார்கள்,”.

“அனைத்து மாஃபியா குடும்பங்களும் சேர்ந்து செய்ததை விட இந்த குடியேறிகள்

தொடர்ச்சி: பக்கம் 17

## இருமடங்கு விலையில் இந்தியா யூரியாவை இறக்குமதி



மத்திய கிழக்கு மோதலால் ஏற்பட்ட விநியோகத் தடைகளுக்கு மத்தியில், இந்த ஆண்டின் தொடக்கத்தில் இந்தியா செலுத்திய விலையை விட இருமடங்கு விலையில் யூரியாவை இறக்குமதி செய்ய ஒப்புக்கொண்டுள்ளதாக ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

புது தில்லி, ஒரே டெண்டரில் சாதனை அளவாக 2.5 மில்லியன் மெட்ரிக் டன் நைட்ரஜன் அடிப்படையிலான இந்த உரத்தை இறக்குமதி செய்ய உள்ளது.

இந்தியன் பொட்டாஷ் லிமிடெட் நிறுவனம், மேற்குக் கடற்கரைக்கு விநியோகம் செய்வதற்காக ஒரு டன்னுக்கு 935 டொலர் விலையில் 1.5 மில்லியன் டன் யூரியாவையும், கிழக்குக் கடற்கரைக்கு விநியோகம் செய்வதற்காக கூடுதலாக ஒரு டன்னுக்கு 959 டொலர் விலையில் 1 மில்லியன் டன் யூரியாவையும் வாங்க ஒப்புக்கொண்டுள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 15

## ஐரோப்பிய ஒன்றியத்தின் எரிபொருள் இறக்குமதி செலவு $28 பில்லியன்



மத்திய கிழக்கு மோதல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் எரிசக்தி நெருக்கடி ஆழமடைந்து வருவதால், அது பல மாத கால நிச்சயமற்ற நிலையை எதிர்கொண்டுள்ளது. மேலும், எரிபொருள் இறக்குமதிக்காக அந்த அமைப்பு இப்போது மிக அதிக தொகையைச் செலுத்துகிறது என்று எரிசக்தி ஆணையர் டான் ஜோர்ஜென்சன் கூறியுள்ளார்.

ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் போர், உலகளாவிய எரிசக்தி சந்தைகளில் கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தி, எண்ணெய் விலைகளை உயர்த்தியுள்ளதுடன், உலகெங்கிலும் உள்ள நுகர்வோருக்கான எரிபொருள் செலவுகளையும் அதிகரித்துள்ளது. உக்ரைன் மோதல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து ரஷ்யாவுடனான எரிசக்தி உறவுகளைத் துண்டிக்கும் தனது முடிவின் விளைவுகளையும், தனது பசுமை மாற்றக் கொள்கைகளின் செலவுகளையும் ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே சமாளித்து வருகிறது.

தொடர்ச்சி: பக்கம் 16

 © 2026 இலக்கு இணையம்

**ஆசிரியர் தலையங்கம்** | 25 ஏப்ரல், 2026

# எல்லை விரிவாக்க உலகில் மக்கள் இறைமையை மக்கள் அமைப்புக்களாலேயே பாதுகாக்கலாம்

இன்றைய உலகில் எல்லை விரிவாக்கம் என்பதே நாடுகளை ஆளுங்கட்சிகளின் தலைமை அரசியல் நோக்காகவுள்ளது. பொருளாதார வளத்தைப் பெருக்கவும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இதனை ஒவ்வொரு நாடும் ஏதோ ஒரு விதத்தில் கையாளுகின்றன. கூட்டாண்மை பங்காண்மை என்ற முறையில் இடம்பெறும் இந்தச் செயற்பாடு மக்கள் இறைமையை வல்லாண்மைகள் மேலாண்மைகள் நாடுகளை ஆளுபவர்களின் துணைகொண்டு ஒடுக்கி மக்கள் இறைமையைக் கட்டாய பகிர்வுக்கு உட்படுத்தும் நடைமுறையைக் கொண்டுள்ளன. அதாவது எந்த நாட்டு மக்களின் மனித வலுவையும் நாட்டின் மூலவளத்தையும் மக்களின் மூலதனங்களையும் தமது நாட்டின் அரசின் தேவைகளுக்கு பயன்படுத்தும் உத்தியாக இது இன்றைய உலகில் பரவலாக உள்ளது. மக்கள் இதற்கு அனுமதிக்காவிட்டால் ஆயுத பலத்தால் இனங்காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்தி அவர்களின் உயிருக்கு உடமைகளுக்கு நாளாந்த வாழ்வுக்கு நெருக்கடிகளை உருவாக்கி உட்கட்டுமானங்களைத் தகர்த்து அவர்களால் தங்களை எதிர்த்து நிற்க இயலாதவாறு செய்துவிட்டு அவர்களுக்கு நன்மைகள் செய்வதாகத் தங்கள் தீர்வை அவர்களே ஏற்க வைத்து மக்களை அடக்குவது அடங்க மறுத்தால் ஒடுக்குவது.

இதுதான் இன்றைய அரசியல் நாகரிகம். இதுவே இலங்கைத் தீவில் ஈழத்தமிழ்த் தேசஇனம் முதல் பலஸ்தீனத்து பலஸ்தீனத் தேசஇனம்; லெபனானிய தேசஇனம் உக்ரேனிய தேசஇனம் ஈரானிய தேசஇனம் வரை இன்றைய சமகால அரசியல் வரலாறாக உள்ளது. அதே வேளை பாதிப்புறும் தேசஇனங்கள் ஒன்றிணைந்து அடக்குமுறை ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுவதை தடுக்க இவைகளுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்றுவிப்பது ஆக்கிரமிப்பாளர்களதும் ஆட்சியாளர்களதும் கூட்டு செயற்பாடாகவும் அமையும். உதாரணமாக ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தின் தொடக்க காலத்தில் ஈழத்தமிழ்ப் போராளிகள் உலகின் மற்றைய போராளிகளாக விளங்கிய பலஸ்தீனிய லெபனானிய தேசங்களில் போர்ப்பயிற்சி பெற்ற தன்மையும், பின்னர் எவ்வாறு முஸ்லீம் ஈழத்தமிழர் உறவுச்சிக்கல்களை உருவாக்கி அது உருக்குலைக்கப்பட்டது என்பதையும் ஈழத்தமிழர் வரலாற்று ஆய்வுகள் வெளிப்படுத்துகிறது என்பதை இலக்கு கவனப்படுத்த விரும்புகிறது.

இவ்வாறான பிளவுகள் ஏன் கொண்டு வரப்படுகின்றன என்ற கேள்வியை எழுப்பினால் எல்லை விரிவாக்க உலகில் மக்கள் இறைமையை மக்கள் அமைப்புக்களாலேயே பாதுகாக்க இயலும் என்பதால் உலகில் உள்ள மக்கள் அமைப்புக்களிடை ஒருமைப்பாட்டினை திட்டமிட்ட வகையில் அடக்குமுறை ஆட்சியாளர்கள் உருக்குலைத்தலைச் செய்தலுக்கே என்பது விடையாகும். அத்துடன் போராடும் மக்களிடை அவர்கள் வாழும் நாடுகளிலேயே பல்குழுக்களை உருவாக்கி பாழ்செய்யும் உட்பகையாக அதனை மாற்றி போராடும் மக்களின் ஒருமைப்பாட்டை உருக்குலைப்பதும் வல்லாண்மைகளின் வழமை. இத்தகைய அரசியல் வழமைகள் இதனை உலக அரசியல் முறைமையாகவே மாற்றிவிடுவதும் நடைமுறையாகவுள்ளது. இவற்றை உணர்ந்து இனியென்கிலும் ஈழத்தமிழர்கள் தங்களுக்கு இடையில் பாழ் செய்யும் குழுநிலைக்கட்டமைப்புக்களை விடுத்து ஈழத்தமிழர் ஒருமைப்பாட்டை கட்டி யெழுப்ப இயன்றது செய்ய வேண்டும். ஈழத்தமிழ் மக்கள் அமைப்புக்கள் பாதுகாப்பான அமைதியான வாழ்வில் வளர்ச்சிகளுடன் ஒருங்கிணைந்து வாழ்வதற்கான நிபந்தனையாக தன்னாட்சி உரிமை பேணப்படவேண்டி உள்ளது. இதனை ஐக்கிய நாடுகள் சபையின் பேராசிரியர் அல்பிரட் டீ சாயஸ் ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமை குறித்து அளித்த விளக்கத்தில் தெளிவாகத் தெரிவித்தார்.

நீதி மறுக்கப்படுவதாலேயே தன்னாட்சி உரிமைக்கோரிக்கை எழுகிறது என்பதையும் அவர் எடுத்துரைத்தார். சமுகநீதிக்கும் சனநாயகத்துக்கும் மூலைக்கல் தன்னாட்சி உரிமை என்பதைத் தெளிவுபடுத்தினார். ஈழத்தமிழர்களைப் பயங்கரவாதிகள் என தவறான விளக்கமளித்து அவர்களின் இனஅடையாளம் உலகால் ஏற்கப்படாது விடப்படுகிறது என்பதை விளக்கிய அவர் ஐ சி யே என ஆங்கிலத்தில் சுட்டப்படும் அனைத்துலக நீதிக்கான நீதிமன்றத்தின் 90 வது பிரிவின் கீழ் ஈழத்தமிழர்கள் அறிவுறுத்தல்களை பெற வேண்டுமென ஆலோசனையும் கூறினார். 25.02. 2019 இல் பிரித்தானியா சாகோஸ் தீவு குறித்த அனைத்துலக நீதிக்கான நீதி மன்றத்தின் தீர்ப்பில் சகோஸ் மக்களின் தன்னாட்சி உரிமையை மொரிசியசுக்கு பிரித்தானியா சுதந்திரம் வழங்கிய பொழுது வன்முறைப்படுத்தியது என கூறியதைச் சுட்டிக்காட்டி ஈழத்தமிழர்களுக்கும் இது பொருந்தும் என தெளிவாக விளக்கினார். ஆனால் இன்று வரை ஈழத்தமிழ் அரசியல் வாதிகள் செயற்பாட்டாளர்கள் இந்த அனைத்துலக நிபுணரின் கருத்தைக் கூட உலக மயப்படுத்த இயலாது உள்ளனர்.

இந்நிலையில் சிறிலங்காவின் புதிய அரசியலமைப்பினை ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் தன்னாட்சி உரிமையை விட்டுக்கொடுக்காத வகையில் எதிர்கொள்ள வேண்டுமென்பதற்கு இவரின் முடிபுகள் அனைத்துலக சட்ட வலு அளிக்கின்றன. இத்தகைய அனைத்துலக நெறிப்படுத்தல்களைக் கூட மக்கள் அந்த அந்த துறைகளில் கட்டமைக்கப்படக் கூடிய ஈழத்தமிழர்களின் மக்கள் அமைப்புக்கள் முன்னெடுத்து இருப்பின் இன்று ஈழத்தமிழர்களின் அரசியல்வாதிகள் ஏற்படுத்துகின்ற குழப்பநிலைகள் தவிர்க்கப்பட்டிருக்கும். இனியாவது இதனை அத்துறைகளில் உள்ள ஈழத்தமிழர்களும் அவர்களின் இளைய சந்தததியும் தாயகத்திலும் புலம்பதிந்து வாழும் நாடுகளிலும் சிந்திக்க வேண்டுமென்பதே இலக்கின் இவ்வார வேண்டுகோளாக உள்ளது.

பின்லாந்தின் முன்னாள் பிரதம அமைச்சர் சான்னா மரினா அவர்கள் இன்றைய காலகட்டம் குறித்த செவ்வி ஒன்றில் யூரோ நியூசில் காலத்துக்கு ஏற்ப எவ்வாறு செயற்பட வேண்டுமென்பதைக் கண்டு பிடிக்க வேண்டும். அதனை நடைமுறைப்படுத்தும் செயற்திட்டமாக உருவாக்க வேண்டும். பின்னர் அதனைக் கட்டியெழுப்ப வேண்டும் எனக் கூறியதையே இவ்விடத்தில் ஈழத்தமிழர்களுக்கு இலக்கு மீள் நினைவுறுத்த விரும்புகிறது.

மேலும் "தெற்கில் தமிழர் விரோத அசுர அரசொன்று இருக்க வேண்டுமென்பதையே வடக்கில் தோல்வி அடைந்த கட்சிகள் விரும்புகின்றன. நாம் அவ்வாறு செயற்பட மாட்டோம். எம்மிடம் இனவாதம் கிடையாது. கொள்கை அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றோம். தேசிய மக்கள் சக்தி என்பது சிறிலங்கா மக்களுக்கான கட்சி. எனினும் வடக்கிலும் தெற்கிலும் உள்ள சில குழுக்கள் இனவாதம் பேசி அரசியல் நடத்துகின்றன. அதே வேளை கொழும்பு அரசுகள் கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தைக் கைவிட்டுள்ளன. ஆனால் எமது ஆட்சி அவ்வாறில்லை யாழ்ப்பாணம் மற்றும் தீவகப் பகுதிகளுக்குரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணம் பருத்தித்துறை மற்றும் நெடுந்தீவு நயினாதீவு போன்ற பகுதிகளுக்கு யாழ்ப்பாண அரசாங்கம் (உள்ளாட்சி மன்றங்கள் ) கூடுதல் முக்கியத்துவம் வழங்க வேண்டும்" இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் பிமல் ரத்தநாயக்கா போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடாக 984.73 மில்லியன் ரூபா மதிப்பிலான குறிகாட்டுவான் இறங்குதுறைப் புனரமைப்பின் இரண்டாவது கட்டப் பணியைத் தொடங்கி வைக்கையில் உரையாற்றியதாக வீரகேசரி நாளிதழின் 23.04.2026ம் திகதிய செய்தி தெரிவித்துள்ளது.

இந்த உரையில் தேசிய மக்கள் சக்தியின் சிறிலங்கா அமைச்சர் பிமல் ரத்தநாயக்கா சிறீலங்காவின் வடக்கு என்று ஈழத்தமிழர் தாயகத்தைக் குறிப்பிட்டுள்ளார். ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைகளைக் கோருபவர்களையும் சில குழுக்கள் எனச் சுட்டி அவ்வாறு அரசியல் உரிமைகளைக் கோருவதை இனவாதம் எனக் கூறியுள்ளார். சிறிலங்காவின் வடக்குக்கான அபிவிருத்தித் திட்டங்களை வடக்கில் செயற்படுத்துவதை யாழ்ப்பாணத்தைக் கைவிடாததன்மை என எடுத்துரைத்துள்ளார். எல்லாவற்றுக்கும் மேலாக உள்ளாட்சி மன்றங்களை யாழ்ப்பாண அரசாங்கம் எனச் சுட்டியுள்ளார். இவ்வாறு தேசிய மக்கள் சக்தி ஈழத்தமிழர்களின் தாயகமாக யாழ்ப்பாண வன்னி அரசுக்கள் பிரித்தானிய காலனித்துவத்தால் கைப்பற்றப்படும் பொழுது இருந்த நிலப்பரப்பு உள்ளது என்கிற வரலாற்றை மாற்றிச் சிறிலங்காவின் வடக்காக அந்தப் பகுதிகளை உலகுக்கு வரலாற்று மாற்றம் செய்கின்றார். ஈழத்தமிழர்கள் இலங்கைத் தீவின் தேசஇனம் என்கிற வரலாற்றை மாற்றி சிறிலங்கா என்னும் பௌத்த சிங்கள நாட்டின் வடக்கில் வாழும் சமுகமாக ஈழத்தமிழர்களை வரலாற்று மாற்றம் செய்கின்றார்.

கூடவே யாழ்ப்பாண அரசில் பிரித்தானிய காலனித்துவத்தால கி.பி. 1796இல் கைப்பற்றப்பட்ட ஈழத்தமிழர்களின் அரசாங்கத்தின் இறைமையுடன் கூடிய ஈழத்தமிழர் தாயகம் பிரித்தானிய காலனித்துவத்தால் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமைக்குள் 04.02. 1948 இல் ஈழத்தமிழரின் விருப்புப் பெறப்படாது இணைக்கப்பட்டதால் ஈழத்தமிழர் தேசிய பிரச்சினை என்பது சிங்கள நவகாலனித்துவத்துள் உள்ளடக்கப்பட்ட ஈழத்தமிழர்களின் இறைமையுள்ள தன்னாட்சியை மீளப் பெறுவது என்கிற ஈழத்தமிழர் தேசிய விடுதலைப்போராட்டத்தின் அடிப்படையையே இறைமை நீக்கம் தேசிய நீக்கம் செய்யும் வரலாற்று மாற்றமாகச் சிறிலங்காவின் உள்ளாட்சி சபைதான் அவர்களுக்கான அரசாங்கம் என்கின்ற ஒரே நாடு சிங்கள நாடு ஒரே சட்டம் பௌத்த ஆகமச் சட்டம் ஒரே நிர்வாகம் சிங்கள நிர்வாகம் ஒரே சட்டவாக்க சட்ட அமுலாக்கம் சிங்கள பௌத்த சட்டவாக்க சட்ட அமுலாக்கங்கள் என்கின்ற வரலாற்று மாற்றத்தை தேசிய மக்கள் சக்தியின் அமைச்சரின் ஒவ்வொரு சொல்லாட்சியும் வெளிப்படுத்திய உரையாக இந்த உரை அமைந்துள்ளது. ஈழத்தமிழரின் பாதுகாப்பான வாழ்வுக்கான அவர்களில் இருந்து யாராலும் பிரிக்க இயலாத தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அவர்கள் அரசியல் உரிமைகளைக் கோருவது என்பதை இனவாதம் என்பது இறைமை மறுப்புக்கான உத்தி என்பதையும் இலக்கு தெளிவாக எடுத்துரைக்க விரும்புகிறது.

இந்நேரத்தில் ஈழத்தமிழரின் வரலாற்றை இன்றைய தேசிய மக்கள் சக்தி தலைகீழாக மாற்றுவதை ஈழத்தமிழர்களில் சிலர் கொழும்பில் கம்பன் விழா நடாத்தி உலகில் ஈழத்தமிழர்கள் புலம்பதிந்து வாழும் நாடுகளில் உள்ள தங்களின் தோழர்களையும் அழைத்து தமிழகத்தவர்களையும் துணைக்கழைத்து சிறிலங்காவின் இன்றைய அரசத்தலைவர் அநுர குமரதிசநாயக்காவுக்கு "வரலாற்றை மாற்றியவன்" என விருது கொடுத்து நாம் மேலே குறிப்பிட்ட ஈழத்தமிழர் என்னும் தேச இனத்தைச் சமுகமாக மாற்றும் தேசிய நீக்கத்தை அங்கீகரிக்கின்றார்கள். இந்த மண் எங்களின் சொந்த மண் என்கின்ற இறைமையுடன் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை இலங்கையின் யாழ்ப்பாண வன்னியரசின் நிலப்பரப்புக்களில் வாழ்ந்து மீளவும் தங்கள் இறைமையுள்ள தன்னாட்சியின் மூலம் தங்களின் பாதுகாப்பான அமைதியுடன் கூடிய வளர்ச்சிகளை மீளமைக்கப் போராடி வரும் ஈழத்தமிழர்களைச் சிறிலங்கா இறைமை நீக்கம் செய்வதை அங்கீகரிக்கின்றார்கள். இதன் வழி ஈழத்தமிழர்களின் மக்களாணை தங்களின் இன்றைய செயற்பாடுகளுக்கு உண்டெனச் சிங்கள அரசு உலகிற்கு நியாயப்படுத்தும் என்பதை இலக்கு உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்களுக்குக் கவனப்படுத்த விரும்புகிறது.

இதனை தாயகத்திலும் உலகிலும் உள்ள ஈழத்தமிழர்களின் இலக்கியப் பிரதிநிதிகளாகத் தங்களுக்குத் தாங்களே பட்டம் சூட்டிக்கொண்ட ஒரு சிலர் கம்பனின் இலக்கியக் கோட்பாடே என்னென்று தெரியாத நிலையில் தங்களுடைய தன்னலத்துக்காகச் செய்கின்றார்கள் என்பது ஈழத்தமிழர்களுக்குத் தெரியும். ஆனால் அனைத்துலக சமுகத்துக்குத் தெரியாது என்பதே பிரச்சினை. இவர்களின் இந்த இழிசெயலால் உயிராலும் இரத்தத்தாலும் உடலுறுப்பு இழப்புக்களாலும் வாழ்விழப்புக்களாலும் முத்திரையிடப்பட்ட ஈழத்தமிழர்களின் நடைமுறையரசை சிறிலங்கா 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பால் 146000 ஈழத்தமிழர்களைத் தேசமாகவே இனப்படுகொலை செய்து மீளவும் தனது பாராளுமன்றக் கொடுங்கோன்மையுடன் கூடிய ஆயுதப்படை நிர்வாகத்தின் மூலம் கடந்த பதினேழு ஆண்டுகள் ஈழத்தமிழர்களின் அரசியல் பணிவை பெற்றுவருகிறது என்பதே நடைமுறை உண்மை. அந்நிலையினை மாற்றியமைக்கத் தேசிய மக்கள் சக்தி அரசும் இதுவரை எதனையும் நடைமுறையில் செய்யவில்லை என்கின்ற வரலாற்று உண்மை இவ்விருது வழங்கலால் பாதிப்புறும் என்பதையே இலக்கு இவ்வாரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

அதுவும் அன்னை பூபதி ஈழத்தமிழர்கள் சிங்கள பௌத்த பேரினவாத இனஅழிப்பு அரசை உரிய தீர்வு வராதவரை ஒருபொழுதும் ஏற்க மாட்டார்கள் அதனை ஏற்க வைப்பதற்கான இந்திய மேலாண்மை அரசின் செயற்பாடுகளையும் ஏற்க மாட்டார்கள் என உலகிற்கு தன்னுயிரையே அகிம்சை வழியில் ஈகம் செய்த ஏப்ரல் மாதத்திலேயே இத்தகைய ஈழத்தமிழரின் வரலாற்றையே மாற்றுகிற செயல்களை ஈழத்தமிழர்களே செய்கின்றார்கள் என்கின்ற பொழுது இவர்கள் தமிழினத்தவரா என்கின்ற ஐயம் இயல்பாகும்.

ஆயினும் இவ்விடயத்தில் உணர்ச்சி வசப்படாது சனநாயக வழிகளில் அகிம்சை முறையில் அனைத்துலகச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்களாக இத்தகைய செயற்பாடுகளைச் செய்பவர்களுக்கு ஈழத்தமிழர்கள் தங்கள் எதிர்ப்பைக் கருத்தை கருத்தால் எதிர்க்கும் எழுத்துக்கள் பேச்சுக்கள் வழி வெளியிட்டு இவர்களின் செயலை உலகுக்குத் தெளிவாக்க வேண்டும் என்பதே இலக்கின் இவ்வார எண்ணம்.

இந்த விருது ஈழத்தமிழர்களால் வழங்கப்படும் விருதல்ல என்பதைச் சிறிலங்காவின் அரசத்தலைவர் அநுரகுமர திசநாயக்காவுக்கும் தெளிவுபடுத்தி இந்த விழாவிலேயே கருஜெயசூரியாவுக்கும் விருது வழங்கப்படுவது அநுர தோற்பார் என்கிற எதிர்பார்ப்பில் நடைபெறுகிற பாதபூசை என்பதையும் எடுத்து விளக்க வேண்டிய நேரமிது என்பது இலக்கின் கருத்தாகவுள்ளது.

**ஆசிரியர்**



# துணை ஜனாதிபதியின் வருகையும் தூரப் போகும் தமிழர் அபிலாசைகளும்

**விதுரன்**

இந்தியாவின் துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணனின் கடந்தவார இலங்கை விஜயமானது, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால இராஜதந்திர உறவுகளில் ஒரு முக்கிய மைல்கல்லாக காண்பிக்கப்படுகின்றது.



முக்கால் நூற்றாண்டு கால வரலாற்றில், இந்திய துணை ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு மேற்கொண்ட முதலாவது அதிகாரபூர்வ பயணம் இது என்பதால், இது மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுவதாகவும் வெளிப்படுத்தப்படுகிறது.

ஆனால் தமிழக சட்டமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னதாகவே அவர் இலங்கைக்கு வருகை தந்திருப்பது, பாரதீய ஜனதா கட்சியின் மிக முக்கியமான அரசியல் நகர்வுகளில் ஒன்றாகும்.

வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களுக்கான ஆறு தலைமுறை குடியுரிமை அறிவிப்பு மற்றும் தமிழர் என்ற அடையாளத்தை முன்னிறுத்தி மேற்கொள்ளப்பட்ட இந்தப் பயணம், தமிழக அரசியல் களத்தில் பி.ஜே.பி-யின் செல்வாக்கை உறுதிப்படுத்துவதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது.



இதேநேரம், இந்திய துணை ஜனாதிபதியை இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மற்றும் தமிழ் தேசிய பேரவை ஆகிய மூன்று பிரதான தரப்புகளைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் ஒன்றாகச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

இந்த மூன்று தரப்புகளிலும் ஒன்பதுக்கும் அதிகமான கட்சிகள் உள்ளடங்கியிருப்பது, ஒரு சிறிய மக்கள் தொகையைக் கொண்ட தமிழ் சமூகத்திற்குள் நிலவும் அரசியல் சிதறலைத் தெளிவாகக்காட்டுகிறது.

இத்தகைய பலவீனமான அரசியல் கட்டமைப்பு, இந்திய துணை ஜனாதிபதியின் கவனத்தை ஈர்த்ததுடன், தமிழ் அரசியல் தலைமைகள் மத்தியில் உட்கட்சி மற்றும் கட்சிகளுக்கு இடையிலான ஒற்றுமையின் அவசியத்தை அவர் வலியுறுத்தவே வழிவகுத்திருக்கிறது.

தமிழ் தரப்பைப் பொறுத்தவரை, இந்தியாவே இன்றும் இலங்கையில் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய ஒரே சக்தியாகத் தொடர்ச்சியான நிலைப் பாடாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.



அந்த நிலைப்பாட்டின் நம்பிக்கையின் அடிப்படையிலேயே, தமிழ்த் தலைவர்கள் தங்களது உள்ளக முரண்பாடுகளைக் கூட சந்திப்பில் கொட்டித்தீர்த்துக் கொண்டனர். அதேநேரம் இந்தச் சந்திப்பின்போது, தமிழ் தேசிய பேரவையினர் ஒரு மனுவைக் கையளித்தனர். அதில், ‘ஏக்கிய ராஜ்ய’ (ஒற்றையாட்சி) அரசியல் யாப்பைத் தடுத்து நிறுத்துவதற்கும், சமஷ்டி அடிப்படையிலான தீர்வைச் சாத்தியமாக்குவதற்கும் இந்தியாவினால் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் பிரயோகிக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

காணி அபகரிப்புகள், பௌத்தமயமாக்கல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் தாமதம் போன்ற விடயங்களில் இந்தியாவின் நேரடித் தலையீட்டையும் தமிழ்த் தலைவர்கள் வழக்கம்போலவே கோரியுள்ளனர். இருப்பினும், இந்த எதிர்பார்ப்புகள் எந்தளவுக்கு யதார்த்தமானது என்பதில் ஒரு பெரிய கேள்விக்குறி உள்ளது. ஏனென்றால் எந்த விடயங்கள் சம்பந்தமாகவும் துணை ஜனாதிபதி வாய் திறக்கவே இல்லை.

இதற்கு காரணங்களும் இல்லாமலில்லை. ஏனென்றால் இந்தியாவைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி பதவியே ஒரு ‘கௌரவ வேடம்’ தான். அப்படியிருக்கையில், துணை ஜனாதிபதி பதவி என்பது பற்றி விளக்கமளிக்க வேண்டியதில்லை.



ஆனால் சி.பி.இராதாகிருஷ்ணனைப் பொறுத்தவரையில் ஆர்.எஸ்.எஸ் கட்டமைப்பில் செல்லாக்குச் செலுத்தக்கூடியவர்களில் மிக முக்கியமானவராக உள்ளார். அந்த பலத்தை மட்டுமே பயன்படுத்த முடியும். அதுபற்றி மூலோபாய ரீதியாக தமிழ்த் தலைமைகள் சிந்தித்திருக்கவே இல்லை என்பது கவலைக்குரியது.

இதேநேரம், ஒரு காலகட்டத்தில், இலங்கையைக் கட்டுப்படுத்துவதற்கான கருவியாக இந்தியா தமிழர் விவகாரத்தைப் பயன்படுத்தியது என்பது மறுக்க முடியாத உண்மை. ஜே.ஆர். ஜயவர்த்தன அரசாங்கத்தைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்காகத் தமிழ் அமைப்புகளுக்குப் பயிற்சி மற்றும் ஆயுதங்களை வழங்கிய காலத்திலிருந்து, இன்று இந்தியா கையாளும் விதம் முற்றிலும் மாறியிருக்கிறது.

தற்போது, கொழும்பைக் கையாளுவதற்குத் தமிழர் விவகாரம் ஒரு முதன்மைத் தந்திரமாகப் பயன்படுத்தப்படுவதில்லை. சீனா போன்ற போட்டி நாடுகள் இந்தியப் பெருங்கடலில் கால்பதிப்பதைக் தடுப்பதும், இந்தியாவின் மூலோபாய நலன்களைப் பாதுகாப்பதும் இன்று இந்தியாவின் முதன்மை நோக்கமாக மாறியுள்ளது.

இந்திய வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி, தமிழ் கட்சிகளுடனான பேச்சுவார்த்தை குறித்துக் கூறிய பதில்கள், இந்தியாவின் இப்போதைய அலட்சியப் போக்கைச் சுட்டிக்காட்டுகின்றன.

தமிழ் கட்சிகள்; மாகாண சபைத் தேர்தல்கள், கடந்த 12 ஆண்டுகளாகத் திட்டமிட்டே முடக்கப்பட்டுள்ளன. இது வடக்கு-கிழக்குக்கு மட்டுமல்லாது, இலங்கையின் ஒட்டு

தொடர்ச்சி: பக்கம் 15

# வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பல்கலைக்கழக அனுமதியில் கலைப்பிரிவில் தொடர் சாதனை
# ஏனைய துறைகளில் வீழ்ச்சி!




2025/26 ஆம் ஆண்டுக்கான க.பொ.த (உ/த) பரீட்சைகள் இரு கட்டங்களாக நடைபெற்றன. முதல் கட்டத்தில் விஞ்ஞானப் பிரிவுக்கான பரீட்சைகள் நிறைவடைந்த நிலையில், திட்வா புயலின் சீற்றம் மற்றும் சீரற்ற மழைவீழ்ச்சி காரணமாக வணிகப்பிரிவு மற்றும் கலைப் பிரிவுகளில் சில பாடங்கள் ஒத்தி வைக்கப்பட்டு, 2026 ஜனவரி மாதத்தில் இரண்டாம் கட்டமாக பரீட்சை நடைபெற்று மிகக் குறுகிய காலத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிட்டமை பாராட்டத்தக்கது.

2025/26 ஆம் ஆண்டில் 281,810 மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி, 176,527 (62.64%) மாணவர்கள் மூன்று பாடங்களில் சித்தி பெற்று, பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்றுள்ளனர். இந்த சித்தி வீதம் 2024 ஆம் ஆண்டை விட, 2.08% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. அதே வேளை 8,300 மாணவர்கள் (2.29%) 3 பாடங்களிலும் 3A சித்தி பெற்றுள்ளனர். இந்த சித்தி வீதம் 2024 ஆம் ஆண்டை விட, 0.4% குறைவாகும். அதேபோல் 30,898 (10.96%) மாணவர்கள் . இது கடந்த ஆண்டை விட (2024) 0.30% அதிகரிப்பாகும்.

| | 2024 | | 2025 | |
|---|---|---|---|---|
| | பரீட்சை எண்ணிக்கை | சித்தி % | பரீட்சையில் எண்ணிக்கை | சித்தி % |
| 1. மூன்று பாடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றியோர் | 274,361 | - | 281,810 | - |
| 2. பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதிபெற்றவர்கள் | 177,588 | 64.73% | 176,527 | 62.64% |
| 3. 3A சித்தி பெற்றவர்கள் | 9,458 | 3.45% | 8,300 | 2.95% |
| 4. 3F (All F) / சகல பாடங்களிலும் சித்தி பெறத் தவறியோர் | 29,244 | 10.66% | 30,898 | 10.96% |

அட்டவணை 1.0 – 2025 பெறுபேறுகளின் பகுப்பாய்வு

கடந்த நான்கு வருடகால உயர்தரப் பரீட்சையில் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்யும் போது, பல்கலைக்கழக அனுமதியில் வட மாகாணம் தேசிய மட்டத்தில் 2022, 2023, 2025 ஆம் ஆண்டுகளில் முதலிடத்தைத் தக்க வைத்துள்ளது. அதேவேளை 2024 ஆம் ஆண்டில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. அத்தோடு தேசிய மட்டத்தில் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் 2023 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் சாதனை படைத்துள்ளது.

அதேபோல் கிழக்கு மாகாணம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும், 2024 ஆம் ஆண்டில் 7 ஆம் இடத்தையும், 2025 ஆம் ஆண்டில் 6 ஆம் இடத்தையும் பெற்று சற்று பெறுபேறு வீழ்ச்சி அடைந்துள்ளது. அதேவேளை கிழக்கு மாகாணம் 2025 ஆம் ஆண்டில் வணிகப்பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடத்தப் பெற்று சாதனை படைத்துள்ளது. குறிப்பாக 2025 ஆம் ஆண்டில் பௌதிக விஞ்ஞானத்துறை மற்றும் வணிகத்துறையில் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று வடக்கு, கிழக்கு மாகாணம் சாதனையை பதிவு செய்துள்ளமை மகிழ்ச்சி அளிக்கிறது.

| மாகாணம் | 2022 | | 2023 | | 2024 | | 2025 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சித்தி % | தேசிய லை | சித்தி % | தேசிய லை | சித்தி % | தேசிய நிலை | சித்தி % | தேசிய நிலை |
| வடக்கு மாகாணம் | 66.57 % | 1 | 67.12 % | 1 | 65.96 % | 2 | 65.19 % | 1 |
| கிழக்கு மாகாணம் | 66.15 % | 2 | 65.67 % | 2 | 63.59 % | 7 | 62.56 % | 6 |

அட்டவணை 3.0 – 2022 - 2025 வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பெறுபேறுகள்

**வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பல்கலைக்கழக அனுமதியில் கலைப்பிரிவில் தொடர் சாதனை! ஆனால் ஏனைய துறைகளில் வீழ்ச்சி!**

2022 - 2025 ஆம் ஆண்டு வரையிலான க.பொ.த. (உ/த) பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்யும்போது, மூன்று பாடங்களில் சித்தி பெற்று, பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதி பெற்ற மாணவர் சதவீதத்தை மாவட்ட ரீதியாக பகுப்பாய்வு செய்யும் போது, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆறு மாவட்டங்கள் தேசிய ரீதியில் முதல் 10 நிலைக்குள் இடத்தைப் பிடித்ததோடு, மன்னார் மாவட்டம் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது..

**திரு. ந. சந்திரகுமார்**
SLPS - I
COE (Merit), Dip. in Agri. (Gold medal), Sp.Trd in Sc., Dip. in Th., B.Ed in Sc.(Hons), PGDLL & AL, M.A. in Phil (Hons), M.A in Ed. (First Class), M.Ed (OUSL)., M.A. in Psy (Hons) PGD in CD, Post B.Ed. School Administration., PGDEM (Merit), M.Sc. in Edu.Mgt, M.Phil in Edu.

ஆனால் 2024 மற்றும் 2025 ஆண்டுகளில் வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூன்று மாவட்டங்களே தேசிய ரீதியில் முதல் 10 மாவட்ட நிலைக்குள் இடத்தைப் பிடித்துள்ளன. முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா மாவட்டங்களே முதல் 10 மாவட்ட நிலைக்குள் இடத்தைத் தவறவிட்டுள்ளன. அதேவேளை கிளிநொச்சி மாவட்டம், திருகோணமலை மாவட்டம் ஆகியவற்றின் பெறுபேறுகள் வீழ்ச்சி அடைந்துள்ளமையும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய விடயமாகக் கருதப்படுகிறது.

| வட, கிழக்கு மாவட்டங்கள் | 2022 | | 2023 | | 2024 | | 2025 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பல்கலைக்கழக சதவீதம் | தேசிய நிலை | பல்கலைக்கழக சதவீதம் | தேசிய நிலை | பல்கலைக்கழக சதவீதம் | தேசிய நிலை | பல்கலைக்கழக சதவீதம் | தேசிய நிலை |
| 1. மன்னார் | 71.95 | 3 | 70.12 | 1 | 67.56 | 3 | 70.27 | 2 |
| 2. மட்டக்களப்பு | 67.50 | 4 | 67.62 | 4 | 66.18 | 8 | 69.94 | 3 |
| 3. யாழ்ப்பாணம் | 66.53 | 6 | 68.52 | 3 | 67.35 | 2 | 68.45 | 6 |
| 4. அம்பாறை | 63.84 | 14 | 64.53 | 13 | 62.77 | 22 | 67.46 | 12 |
| 5. வவுனியா | 64.34 | 9 | 65.65 | 9 | 64.87 | 11 | 64.09 | 16 |
| 6. முல்லைத்தீவு | 70.05 | 2 | 68.44 | 2 | 66.60 | 9 | 64.87 | 17 |
| 7. திருகோணமலை | 68.91 | 3 | 65.79 | 7 | 62.77 | 16 | 63.66 | 19 |
| 8. கிளிநொச்சி | 62.10 | 20 | 58.75 | 24 | 59.19 | 24 | 62.96 | 20 |

அட்டவணை 3.0 – 2022 – 2025 வரை பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதி பெற்ற வட, கிழக்கு மாவட்ட பகுப்பாய்வு

கடந்த நான்கு ஆண்டுகால க.பொ.த(உ/த) பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்யும் போது, கலைப்பிரிவில் பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர் தொகை, ஏனைய பிரிவில் கற்கும் மாணவர் தொகையை விட உயர்வாக இருப்பதோடு, 2022, 2023, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் வட மாகாணமே கலைப்பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடத்தையும், கிழக்கு மாகாணம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன. கலைப்பிரிவில் அதிகளவு பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர் தொகை தொடர்ந்து அதிகரித்து வருவதால்.....

- வடக்கு, கிழக்கு மாகாணத்தில் கலைப்பிரிவில் கற்று உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்ற அதிகளவு மாணவர்கள் மூன்றாம் நிலை மற்றும் உயர்கல்வியைப் பெறுவதில் இடர்பாடுகள் காணப்படுகின்றன.
- வடக்கு, கிழக்கு மாகாணத்திலேயே அதிகளவு கலைப் பட்டதாரிகள் தொழில் எதுவுமின்றி வேலையில்லா பட்டதாரிகளாக உள்ளனர்.

| மாகாணம் | 2025 | | 2024 | | 2023 | | 2022 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சதவீதம் | தரம் | சதவீதம் | தரம் | சதவீதம் | தரம் | சதவீதம் | தரம் |
| வடக்கு மாகாணம் | 72.59% | 1 | 70.51% | 1 | 73.50% | 1 | 72.12% | 1 |
| கிழக்கு மாகாணம் | 72.34% | 2 | 67.99% | 4 | 70.88% | 2 | 69.78% | 2 |

அட்டவணை 4.0 – வடக்கு, கிழக்கு மாகாண ரீதியில் கலைப்பிரிவு தேசிய மட்ட பெறுபேறுகள் 2022 – 2025பெறுபேறுகள்

மேலும் உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர் தொகையும், ஏனைய மாகாணங்களை விட, உயர்வாக இருப்பதோடு, வடமாகாணம் தேசிய மட்டத்தில் 2025, 2024, 2023 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இரண்டாவது நிலையையும், கிழக்கு மாகாணமும் தேசிய ரீதியில் முதல் ஐந்து இடத்தையும் பெற்று சாதனை படைத்து வருகிறது. அதே வேளை 2022 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணம் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

| மாகாணம் | 2025 | | 2024 | | 2023 | | 2022 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் |
| வடக்கு மாகாணம் | 64.76% | 2 | 60.37% | 3 | 61.85% | 2 | 60.89% | 2 |
| கிழக்கு மாகாணம் | 60.44% | 5 | 58.84% | 4 | 60.08% | 4 | 59.92% | 3 |

அட்டவணை 5.0 – வடக்கு, கிழக்கு மாகாண ரீதியில் உயிரியல் பிரிவு தேசிய மட்ட பெறுபேறுகள் 2022 – 2025

கடந்த நான்கு ஆண்டு கால க.பொ.த.(உ/த) பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்யும் போது, பௌதிக விஞ்ஞானப்பிரிவில் பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர் தொகை, வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தேசிய மட்டத்தில் திருப்திகரமான மட்டத்தில் உள்ளது. வட மாகாணம் 2022 ஆம் ஆண்டில் தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தையும், 2023 ஆம் ஆண்டில் தேசிய மட்டத்தில் 3ஆம் இடத்தையும் பெற்ற அதேவேளை, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் முறையே தேசிய மட்டத்தில் 6ஆம், 5ஆம் இடத்தைப் பெற்றுள்ளமையானது, பௌதிக விஞ்ஞானப் பிரிவில் சாதனை மட்டம் வீழ்ச்சியடைந்து வருவது கவலையளிக்கிறது. கிழக்கு மாகாணம் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் தேசிய ரீதியில் மிகவும் பின் தங்கிய நிலைக்கு உளளதையும் கவனிக்கத்தக்கது.

| மாகாணம் | 2025 | | 2024 | | 2023 | | 2022 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் |
| வடக்கு மாகாணம் | 61.39% | 5 | 59.43% | 3 | 58.8% | 3 | 58.19% | 2 |
| கிழக்கு மாகாணம் | 57.84% | 8 | 57.71% | 8 | 54.54% | 7 | 56.05% | 7 |

அட்டவணை 6.0 – வடக்கு, கிழக்கு மாகாணத்தின் பௌதிக விஞ்ஞானப்பிரிவு தேசிய மட்ட பகுப்பாய்வு – 2022 – 2025

இதேபோல் வணிகப்பிரிவில் வடக்கு மாகாணம் கடந்த நான்கு வருடங்களில் தேசிய மட்டத்தில் 2022 இல் 2 ஆவது இடத்தையும்,2023இல்3ஆவது இடத்தையும்,2024ஆம்ஆண்டில் 3 ஆவது இடத்தையும், 2025 ஆம் ஆண்டில் 6 ஆம் இடத்தையும் பெற்றுள்ளமையானது, வணிகப்பிரிவில் வடமாகாணம் மேலும் அதிக கவனம் செலுத்துவதோடு, தேசிய மட்டத்தில் முதல் 3 நிலைக்குள் பெறுபேற்றை அதிகரிப்பதற்கு விசேட செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அதே வேளை கிழக்கு மாகாணம் வணிகப்பிரிவில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளமை கவலையளிக்கிறது. இந்த நிலைமைக்கான காரணங்களைக் கண்டறிய கிழக்கு மாகா ணக்கல்வித் திணைக்களம் செயல்நிலை ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.

| மாகாணம் | 2025 | | 2024 | | 2023 | | 2022 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் |
| வடக்கு மாகாணம் | 68.67% | 6 | 70.98% | 4 | 65.89% | 6 | 69.42% | 3 |
| கிழக்கு மாகாணம் | 67.18% | 7 | 64.82% | 8 | 65.81% | 7 | 68.14% | 5 |

அட்டவணை 7.0 – வடக்கு, கிழக்கு மாகாணத்தின் வணிகப்பிரிவு தேசியமட்ட பெறுபேறுகள் - 2022 – 2025

தொடர்ச்சி: பக்கம் 17

# தமிழ் சட்டத்தரணிகள் பேரவை முயற்சிக்கு... தமிழ் தேசிய கட்சிகளின் சட்டத்தரணிகள் சிலர் முரண்.!

பா.அரியநேத்திரன்

அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் அல்லது புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது, ஒரே அணியில் அல்லது ஒருங்கிணைந்த கருத்துக்களை தமிழ்த் தேசிய கட்சிகள் முன்வைப்பது அதன் வெற்றிக்கான முக் கிய காரணியாகும்.

புதிய அரசியலமைப்பில் மலையக மக்கள், சிறு பான்மையினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் நலன் களைக் கருத்திற்கொண்டு, அமைப்புகள், குழுக்கள் மற்றும் தனிநபர்கள் ஒருங்கிணைந்த கருத்துக்களை முன் வைக்க வேண்டும்.



மக்கள் கருத்தறியும் குழுவின் ஊடாக, அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும் உள்ளடக்கிய ஒருமித்த கோரிக்கைகளை முன்வைக்க முடியும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை: இலங்கையின் அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படுவதால், அரசியல் கட்சிகளுக் கிடையிலான இணக்கப்பாடு மற்றும் ஒருமித்த கருத்து முக்கியமானது.

அரசியல் அமைப்பில் அதிகாரப் பகிர்வு மற்றும் கூட்டாட்சி தத்துவம் போன்ற விடயங்களில், ஒரே அணியில் கருத்துக்கள் முன்வைக்கப்படும்போது, பேரம் பேசுதல் மற்றும் ஒருமித்த முடிவுகளை எடுப்பது எளிதாகும்.

ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைக்கான போராட்டம் 78 ஆண்டுகாலமாக தொடர்ந்தாலும் கடந்த 2009 மே 18 ல் முள்ளிவாய்கால் பேரனர்த்தம் மற்றும் விடுதலைப் புலிகளின் ஆயுதப்போர் மௌனத்திற்கு பின்னர் எதிர் வரும் 2026 மே 18 ல் 17 ஆண்டுகளாக தமிழ்தேசிய கட்சி கள் ஒற்றுமையின்றி சிதறிய நிலையில் ஒருமித்து கருத் தொற்றுமையாக ஒரு அரசியல் தீர்வுத்திட்டத்தை தயாரிக்க முடியவில்லை. தேர்தல் அரசியலில் பதவியை மையப்படுத் தியதாகவே தமிழ்த்தேசிய அனைத்துக்கட்சிக ளும் உள்ளன.




கொள்கைரீதியிலான தேர்தல் அரசியலில் மக்களை அணிதிரட்ட முடியாமல், கோடியிருந்தால் மக்களை தம்பக்கம் ஈர்க்கலாம் என்ற கருத்தே கடந்த 17 ஆண்டுகளாக ஈழத்தில் தமிழ் மக்களை சில கட்சிகள் தம்வசமாக்கியும், தனிநபர்களை முதன்மைபடுத்திய அரசியலாகவுமே செயல் படுவதை காணலாம்.



கடந்த 2024 செப்டம்பர் 21 ல் இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஈழத்தமிழர்களின் கொள்கையை பலமாக காட்டி வடகிழக்கு மக்களை ஒரு குடையின் கீழ் அணிதிரட்டலாம் என குடிசார் பொது அமைப்புகள் எடுத்த நல்ல முயற்சியினையும் தட்டிக்கழித்த பிரதான கட்சியான இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் ஒரு அணியினர் அதனை முறியடிக்க சிங்கள தேசியவாதத்துக்கு சஜீத் பிரமதாசாவை ஆதரித்ததும், மற்றொரு கட்சியான ஒரு நாடு இரு தேசம் என கூறும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிப்பதற்கான பிரசாரங்களை முன்எடுத்தமையாலும் அவர்களுடைய பிரசாரங்களைத் தாண்டி 226343 வாக்குகளை மட்டும் தமிழ்பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனால் பெறமுடிந்தது.

இந்த இரண்டு கட்சிகளும் இணைந்து தமிழ் பொதுவேட்பாளரை ஆதரித்திருப்பின் ஏறக்குறைய ஐந்து இலட்சம் வாக்குகளை பெற்றிருக்கலாம் அதனூடாக சகல தமிழ்த்தேசிய கட்சிகளும் ஒரு கொள்கைரீதியாக ஒற்றுமையாக உள்ளனர் என்பதை உலகத்துக்கு நிரூபித்தும் இருக்கலாம்.

இப்போது 2024 ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களுடன் ஆட்சியமைத்த பின்னர்தான் தாம் விட்ட தவறுகளை தமிழ்த்தேசிய கட்சிகள் உணர்ந்துள்ளன, இதனை நன்கறிந்த வடகிழக்கு ஆயர்களும், மற்றும் தமிழ் சட்டத்தரணிகளும் தமிழ்தேசிய கட்சிகளை ஒற்றுமைப்படுத்தி ஒரு அரசியல் நகலை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். யார் குற்றியும் அரிசியாக வேண்டும் என்பதைப்போல் யாராவது எடுக்கும் இந்த முயற்சியை பாராட்டவேண்டும். அது வெற்றியடைய வேண்டும் என்பதே சகல தமிழ் மக்களின் எதிர்ப்பார்பு.



ஆனால் இப்போது தமிழ் சட்டத்தரணிகள் கடந்த 2026 மார்ச் 02 ம் திகதி தமிழ் தேசிய அரசியல் சக்திகளை ஒன்றிணைத்து நீண்டகால இனப்பிரச்சினைக்கு ஒரு நிலையான அரசியல் தீர்வை எட்டுவதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முயற்சியாக சிதறிக்கிடக்கும் தமிழ் கட்சிகளின் பலத்தை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பலமான முறையில் முன்னிறுத்துவதற்கு தமிழ் சட்டத்தரணிகள் பேரவையின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளின் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் தேசிய அரசியல் கட்சிகளை ஒரு பொதுவான சட்டக் கட்டமைப்பின் கீழ் ஒன்றிணைத்து இனப்பொதுப் பிரச்சினைக்கான தீர்வினை நோக்கிய பயணத்தை வேகப்படுத்துவதே இந்தச் சந்திப்பின் பிரதான நோக்கமாகும் என தமிழ் சட்டத்தரணிகள் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி க.ச.இரத்தினவேல் தெரிவித்திருந்த நிலையில் 2026 ஏப்ரல் 09 ல் மீண்டும் கூடியவர்கள் வடக்கு மற்றும் கிழக்கின் தமிழ் தேசியக் கட்சிகளுக்கிடையே ஒரு உடன்பாட்டை எட்டுவதற்காக, தமிழ் சட்டத்தரணிகள் பேரவையின் ஒருங்கிணைப்பின் கீழ் குழு நியமிக்கப்பட்டது.



தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அந்தக் கட்சிகளின் தலைவர்களின் பங்கேற்புடன், தமது ஒருங்கிணைப்பின் கீழ் இக்கலந்து ரையாடல் நடைபெற்றதாக தமிழ் சட்டத்தரணி கள் பேரவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வுகளுக்கான புதிய அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்கள் குறித்து கட்சிகள் இடையே ஏகமனதாக இணக்கப்பாடு எட்டப்பட்டதாக தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் தற்போது கடந்த 2026 ஏப்ரல் 18 ல் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் பதில் தலைவர் சி வி கே சிவஞானம், பதில் பொதுச்செயலாளர் எம் ஏ சுமந்திரன் இருவரும் கையொப்பம் இட்டு தமிழ் சட்டத்தரணிகள் பேரவைக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளனர் அதில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தனித்து செயல்படுவதாகவும் அவர்களால் இனப்பிரச்சனைக்கான திட்டவரைவு 28 பேர் கையொப்பம் இட்டு கடந்த 2026 ஏப்ரல் 17 ல் வெளியிட்டுள்ளனர். எனவே இதில் தமக்கு சந்தேகம் உள்ளதாக இலங்கை தமிழ் அரசுக்கட்சியால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்கு தமிழ் சட்டத்தரணி பேரவை என்ன பதில் கொடுப்பார்கள் அல்லது தொடர்ந்து ஒற்றுமைக்கு இது தடையாக அமையுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் புதிய அரசியலமைப்பு உருவாக்கும் விவகாரங்களில் பொது இணக்கப்பாடு எட்டப்பட்டுவதற்கு பல தடைகளை சட்டத் தரணிகள் பேரவை தாண்டவேண்டியுள்ளது என்பது மட்டும் உண்மை. சாண் ஏற முழம் சறுக்கும் சமாதான முயற்சியாகவே தென்படுகிறது. இதேவேளை 2026 மார்ச் 18 ல் வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் கூடிய யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆயர்களும் குரு முதல்வர்களும் தமிழ்தேசிய கட்சிகளை பொதுவான ஒரு இணக்கப்பாட்டிற்கு கொண்டுவரவேண்டும் என்ற முயற்சியில் இறங்கியுள்ளனர். இவர்களுடைய அடுத்த கட்ட செயல்பாடுகள் பற்றி என்னால் மேலதிக தகவல்களை பெறமுடியவில்லை.



ஆயர்களுடைய நல்ல முயற்சியும், தமிழ் சட்டத் தரணிகள் பேரவையின் நல்ல முயற்சிகளும் பாராட்டப் படவேண்டிய ஒன்று, ஆனால் தமிழ்தேசிய கட்சிகளில் உள்ள சிலருடைய அடிப்படை சிந்தனை தம்மை விட்டால் ஆளில்லை. “எல்லாம் தெரிந்த ஏகாம்பரம்” நாமே, தமக்கு அனைத்தும் தெரியும் எனப் பாசாங்கு செய்யும் தமிழ்தேசிய கட்சிகளில் உள்ள ஓரிருவர்களால் இவ்வாறான ஒற்றுமை முயற்சிகள் சிதறிச்செல்லவும் வாய்புகள் உண்டு.

கடந்த 2026 ஏப்ரல் 19 ல் தமிழ்த்தேசிய கட்சிகளை சேர்ந்த ஏழு பிரதிநிதிகளுடன் சந்தித்த இந்திய துணை ஜனாதிபதி இராதாகிருஷ்ணன் இலங்கை தமிழ் அரசுக்கட்சி பதில் தலைவர் சி வி கே சிவஞானத்திடம் வடக்கு கிழக்கு பகுதிகளில் கட்சிகள் அதிகரித்துள்ளன அதனை ஓரளவு ஒழுங்குக்கு கொண்டுவாருங்கள் என தம்மிடம் கூறியதாக சி வி கே சிவஞானம் ஊடகங்களில் கூறியிருந்தார். இந்த ஆண்டுக்கான மிகப்பெரிய நகைச்சுவையாக இந்த கருத்தை நோக்கலாம் தங்களுடைய தமிழரசுக்கட்சியே இரண்டு அணியாக இரண்டு வருடங்களாக தொடர்கிறது. அதனை ஒரு அணியாக கொண்டுவர வக்கில்லாத தற்காலிக தலைவர் சி வி கே சிவஞானத்தால் வடகிழக்கில் கட்சிகள் அதிகரிப்பை தடுக்க முடியுமா? கள்ளனிடம் பொலிஸ் வேலை வழங்கிய கதை மாதிரியே இந்திய துணை ஜனாதிபதியின் இந்த ஜோக்கை பார்க்கமுடிகிறது.

தமிழ்சட்டத்தரணிகள் எடுக்கும் நல்ல முயற்சிக்கு தமிழ்தேசிய கட்சிகளில் உள்ள சட்டத்தரணிகள் குழப்பாமல் இருந்தால் மட்டுமே இந்த விடயம் வெற்றியடையும் என்பதே உண்மை!

• • •



# ஈஸ்டர் படுகொலைக்கு நீதியை வழங்குமா சிறிலங்கா அரசு?

தீபச்செல்வன்

இலங்கை முப்பதாண்டுக்கு மேலாக இன அழிப்பிற்கான யுத்தத்தில் சிதைந்த தீவு. முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை நடந்து பதினேழு ஆண்டுகள் ஆகின்ற நாட்களில், இலங்கையை 2019ஆம் ஆண்டில் புரட்டிப் போட்ட ஏப்ரல் 21 ஈஸ்டர் படுகொலையின் நினைவை நாம் ஒரு பாடமாக மீள நினைவூட்ட வேண்டியுள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத கும்பலினால் இயக்கப்பட்ட உள்ளூர் இஸ்லாமிய அடிப்படைவாத குழு ஒன்று நடத்தியதாகக் கூறப்படும் நாசகாரப் பயங்கரம் ஈழ மக்களைப் பொறுத்தரையில் சிறீ லங்கா அரசு ஈழத்தில் நிகழ்த்திய படுகொலைகளை தான் நினைவூட்டுவதும் தவிர்க்க இயலாதது.

### குருதியில் குளித்த குழந்தை யேசு

2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் உயிர்த்த ஞாயிறு தினம். உலகமெங்கும் இருக்கும் கிறீஸ்தவர்கள் யேசு பிரான் உயிர்த்த நாளாக அத் தினத்தை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கின்றனர். அமைதியிழந்து, அவலங்களும் துயரங்களும் மிகுந்த இலங்கைத் தீவில் பிரார்த்தனையில் இருந்த மக்கள்மீது தான் இக் கொடுந்தாக்குதல் நடாத்தப்பட்டது. 8.45 மணிக்கு முதல் குண்டு கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் வெடித்தது. அங்கு மாத்திரம், சுமார் 80 பேர் கொல்லப்பட்டனர். அடுத்து, நீர்கொழும்பு கொச்சிக்கடை ஆந்தோனியார் ஆயலத்திலும், மட்டக்களப்பு சியான் தேவாலயத்திலும் குண்டுகள் வெடித்தன.



இதைத் தவிர, இலங்கை தலைநகர் கொழும்பில் உள்ள பிரபல விடுதிகள் மூன்றில் குண்டுகள் வெடித்தன. இதில் வெளிநாட்டவர்கள் பலர் சிக்கி உயிரிழந்தனர். சுமார் 273 பேர் இந்த தாக்குதலில் சாவடைந்துள்ளனர். அதில் 38பேர் வெளிநாட்டை சேர்ந்தவர்கள். இத் தாக் குதல்களில் கொல்லப்பட்டவர்களில் எழுபது வீதமானவர்கள் தமிழர்கள். இந்த தாக்குதல் குறித்து முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்ட போதும், இதனை தடுத்து நிறுத்த அரசு முயலவில்லை. ஈழத் தமிழ் மக்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதால்தான் அவ்வாறு அரசாங்கம் அசமந்தமாக இருந்ததா? என்கிற சந்தேகமும் உள்ளது.

### இலங்கை அரசா வளர்த்தது?

இத் தாக்குதலை நடாத்தியதாகக் கூறப்படும் இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கத்தை அழிக்கக் கோரி, இஸ்லாமிய மக்களே போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால், சிங்கள அரசு, குறித்த அடிப்படைவாத இயக்கத்தை ஈழ மக்களை அழிக்கவும் போரில் புலிகளை வெல்லவும் பயன்படுத்தியுள்ளதை அரசாங்க தரப்பினரே கூறியிருந்தனர். இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவும் ஆட்சியில் இருந்த அன்றைய அரசும் குறித்த இயக்கத்தை தமது இரகசிய தொடர்பில் பேணி வந்துள்ளனர்.

உலகிலேயே மருத்துவமனைகள் மீதும் தேவாலயங்கள் மீதும் குண்டுகளை வீசிய அரசு, இலங்கை அரசுதான்.



பள்ளிக்கூடங்கள் மீது குண்டுகளை வீசிய அரசும் இலங்கை அரசுதான். குண்டுகள் வீசப்படக் கூடாத மனிதாபிமான - போர் தவிர்ப்பு வலயங்கள்மீது குண்டுகளை வீசி மக்களை அழிக்கும் பயங்கரவாதத்தை உலக பயங்கரவாதிகளுக்கு போதித்ததே இலங்கை அரசுதான். ஈழமண்ணில் உள்ள நவாலி சென் பீற்றர் தேவாலயம் மீது சிங்கள அரசு 1995இல் குண்டுகளை வீசியபோது உருக்குலைந்த அந்த கோயில்தான் இன்று கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தை பார்க்க நினைவுக்கு வருகின்றது. அக் கோயிலில் சிங்கள அரசின் விமான தாக்குதலில் 65 பேர் அந்த ஆலயத்திற்குள்ளேயே சிதறிப் பலியாகினர்.

### புலிகளின் மகத்துவம் உணர்ந்த நாட்கள்

அதைப்போல மன்னாரில் உள்ள உலகப் பிரசித்தி பெற்ற மடுத்தலம் மீது 1999இல் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 45 பொதுமக்கள் ஆலயத்தில் கொல்லப்பட்டார்கள். யாழ்ப்பாணம் நந்தாவில் அம்மன் ஆலயத்தில் நடத்திய குண்டு தாக்குதலில் ஐம்பதிற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டார்கள். யாழ் நாகர் கோவில் பள்ளிமீது குண்டு வீசியதில், 21 பள்ளிக் குழந்தைகள் கொல்லப்பட்டார்கள். கிளிநொச்சி வைத்தியசாலைமீது குண்டுகளை வீசி அதில் நூற்றுக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள். செஞ்சோலை சிறார் இல்லம்மீது குண்டுகளை வீசியில் 54 மாணவிகள் கொல்லப்பட்டார்கள். இறுதி யுத்த காலத்தில் சிங்கள அரசு குண்டுகளை வீசாத இடங்களே இல்லை. அந்தளவுக்கு ஈழ மண்ணை போர் விமானங்கள் உழுதழித்தது.




இலங்கையில் அரசியல் ரீதியாகவும் இனங்களுக்கு இடையிலும் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை பயன்படுத்தியே இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளதாக தமிழ் தலைவர்கள் அப்போது கூறினர். இந்த தாக்குதலுக்கு அன்றைய அரசாங்கம் மன்னிப்பு கோரியது. மக்களை பாதுகாக்க தவறியுள்ளமையை ஒப்புக்கொண்டது. அத்துடன் விடுதலைப் புலிகள் ஒருபோதும் இவ்வாறான தாக்குதல்களை நடாத்தவில்லை, அவர்கள் தமது நோக்கத்தில் தெளிவாக இருந்தனர் என்று இலங்கை அரசு முதல் சர்வதேச சமூகம் வரை கருத்துக்களை கூறின. உண்மையில் புலிகள் இயக்கம் இருந்திருந்தால், இந்த தாக்குதல் இடம்பெற்றிராது. மக்கள் அழிக்கப்பட்டிரார். விடுதலைப் புலிகள் ஈழத் தமிழ் மக்களை மாத்திரமல்ல, சிங்கள மக்களையும் பாதுகாத்திருப்பர். புலிகளின் வீரம் இலங்கை தீவையே பாதுகாக்க உதவும். இப் பயங்கரவாத தாக்குதல்கள் பயங்கரவாதம் என்றால் என்ன என்ற அறிவையும் தெளிவையும் சிங்கள மக்களுக்கு வழங்கியுள்ளது.

### எப்போது நீதி?

இந்த தாக்குதலுக்கான உண்மை முழுமையாக வெளிப்பட வேண்டும் என்பதையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதையும் இலங்கை கிறீஸ்வத சமூகம் கடந்த ஏழு வருடங்களாக வலியுறுத்துகின்றன. நினைவு நிகழ்வுகள் வெறும் அனுதாபத்தின் வெளிப்பாடாக மட்டுமல்லாமல், உண்மையைத் தேடும் மற்றும் மறுபடியும் இப்படிப்பட்ட துயரங்கள் நிகழாதவாறு பாதுகாப்பு அமைப்புகளை வலுப்படுத்தும் வகையில் இருக்க வேண்டும்.



தாக்குதலை உண்மையான திட்டமிட்டவர்கள் மற்றும் பின்னணியில் இருந்தவர்கள் இன்னும் முழுமையாக வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படவில்லை என்று இம்முறை ஈஸ்டர் தாக்குதல் நினைவு நிகழ்வில் கர்தினால் ரஞ்சித் வலியுறுத்தினார். அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் செயல்முறை தாமதமாகும் நிலையில் இருப்பதையும் கடுமையாக விமர்சித்தார். அரசியல் தலையீடுகள் இல்லாமல், சுயாதீனமாகவும் வெளிப்படையாகவும் விசாரணைகள் நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தினார். உண்மையை மறைப்பது அல்லது தாமதப்படுத்துவது நாட்டின் சட்ட ஆட்சி மற்றும் ஜனநாயகத்திற்கு ஆபத்தானது என எச்சரித்தார். ஆக, "உண்மை வெளிப்பட வேண்டும்; நீதி தாமதிக்கக் கூடாது" என்பதே அவரது தொடர் கோரிக்கை.

தமிழ் மக்களின் வாழ்நிலத்திற்காகவும் அவர்தம் உரிமைக்காகவும் போராடிய விடுதலைப் புலிகள் இயக்கத்தை, உலக நாடுகளின் கூட்டு துரோகத்துடன் பயங்கரவாத தாக்குதல்களை நடாத்தி அழித்துவிட்டு, பயங்கரவாதத்தின் கோரத்தை இலங்கை எதிர்கொண்ட அனுபவத்தில் இருந்து இன்னமும் பாடம் கற்றாகவில்லை என்பது கசப்பான உண்மை. இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கு, இலங்கை அரசு தமிழ் மக்கள்மீது நடாத்திய இதுபோன்ற பயங்கரங்களுக்கு நீதியை வழங்கி மன்னிப்பு கோர வேண்டும். ஈழப் படுகொலைகளுக்கே நீதி வழங்காத சிறீலங்கா இப் படுகொலைகளுக்கு மாத்திரம் எப்படி நீதி வழங்கப் போகிறது?

• • •

# இந்திய மீனவர்களின் இரட்டைமடி இழுவைப் படகுகளினால் அழிவடையும் வடக்கு கடல்வளம்




முருகப்பெருமான் மதிவாணன்

கடல்வள ஆய்வுகளைப் பொறுத்தவரையில், கடலில் பிடிக்கக்கூடிய மொத்த மீன்களில் 25% மட்டுமே பிடிக்கலாம். எஞ்சியதில் 75% முட்டையிட்டு இனப்பெருக்கத்தைப் பேணக்கூடிய பெண் மீன்களாக இருத்தல் வேண்டும். இச்சமநிலையைப் பேணின் மட்டுமே, மீன் வளம் தொடர்ச்சியாகக் கிடைக்கும் வளமாக இருக்கும். மீன்பிடியின் அளவை, சந்தை நிலைமைகள் தீர்மானிக்க முடியாது. கிடைக்கக்கூடிய மீன்களின் அளவே, சந்தையைத் தீர்மானிக்க வேண்டும். ஆனால், அவ்வாறு நிகழ்வது அரிது.

மாறாக, இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடைமுறை ஒழுங்கு தேவை எனவும் அவ்வாறான ஒழுங்கின் மூலம், இரு தரப்பினரும் அரசியல் விட்டுக்கொடுப்புகளைச் செய்ய வேண்டும் எனவும் இரு தரப்பினரும் மீன் பிடிக்கும் உரிமையுடன் கூடிய மீன் வளங்களைக் கூட்டு முகாமைத்துவத்தின் கீழ்ப் பகிர வேண்டும் எனவும் இந்தியத் தரப்பினர் சொல்லி வருகிறார்கள்



சில ஆண்டுகளுக்கு முன், பருத்தித்துறை சுப்பர் மட கடற்றொழிலாளர்கள் காலவரையறையற்ற வீதி மறியல் போராட்டத்தை ஆரம்பித்தனர். இதன் காரணமாக பருத்தித்துறை பொன்னாலை கரையோர வீதி முடக்கப்பட்டது. மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லாது புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறை சுப்பர்மடத்தில் ஆரம்பித்த போராட் டம் வடக்கு முழுவதும் மீனவர்கள் புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். வடபகுதி மீனவ அமைப்புக்கள் சுப்பர்மட மீனவர்களது போராட்டத்திற்கு ஆதரவளித்து வீதிமறியல் போராட்ட இடத்திற் கூடினர். மீனவர்கள் போராட்டம் பல் பரிமாண வலுப் பெற்றது. மீனவர்கள் கடலில் இறங்கி போராடவும் எல்லை தாண்டும் இந்திய மீனவர்களை தாம் கைது செய்யப் போவதாகவும் அரசை எச்சரித்தனர்.

அரசையே ஆட்டங்காண வைத்தது போராட்டம் தீர்வின்றி நான்கு நாட்கள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வந்தது.

குறித்த காலத்தில் பருத்தித்துறை சுப்பர்மடம் மீனவர்கள் அத்துமீறி நுழைந்த இந்திய இழுவைப் படகுகளையும் மீனவர்களையும் இலங்கை கடற்பரப்பில் வைத்து கைது செய்தனர். மறுநாள், மாதகல் மீனவர்களும் இதேவகையில், இந்திய இழுவைப் படகுகளையும் மீனவர்களையும் கைது செய்தனர். மறுநாள், உயர்மட்ட இந்திய இராஜதந்திர அழுத்தத்தின் மூலம் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். இவ்வாறான சட்டவிரோத செயல்களில் ஈடுபடக்கூடாதென இலங்கை அதிகாரிகள், இந்திய மீனவர்களை எச்சரித்தனர்.

இலங்கை, இந்தியா ஆகிய இரண்டு அரசாங்கங்களும் இவ்விடயத்தில் எவ்வாறு நடந்து கொள்கின்றன என்பதை, இச் சம்பவங்கள் விளக்குகின்றன. இலங்கை மீனவர்களுக்குப் பாதுகாப்பை வழங்க வேண்டிய கடற்படையினர், எதுவும் செய்யவியலாது தவிக்கின்றனர். அவர்கள், “எங்கள் கைகள், அதிகார மையத்தின் உயர் பீடத்தால் கட்டப்பட்டுள்ளன” என்கிறார்கள்.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள சாதாரண கூலித் தொழிலாளர்களே ஆவர். அவர்களை வேலைக்கமர்த்தி வேலைவாங்கும் முதலாளிகளில், இந்திய நாடாளுமன்றத்தைச் சேர்ந்தவர்களும் அமைச்சர்களும் அடங்குவர். கடல் எல்லையைத்தாண்டி மீன்வளத்தைக் வாரிஅள்ளிக் கொண்டுவருமாறு, சாதாரண மீனவர்கள், முதலாளிகளால் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.



அத்துமீறி மீன்பிடிப்போரைப் பற்றிப் பேசும்போது, அதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களையும் அவர்களுக்குப் பின்னால் உள்ள தமிழகத்தின் பெருமுதலாளிகளையும் வெவ்வேறாகக் கவனிக்க வேண்டும். அதைச் செய்யாமையாலேயே பிரச்சினை தீராதுள்ளது.

பல வருடங்களாக, இலங்கை அதிகாரிகளுக்கும் இந்திய அதிகாரிகளுக்கும் இடையிலும் இரு தரப்பு மீனவர்களுக்கு இடையிலும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடந்துள்ளன. ஆனால், இந்திய அரசாங்கத்தினதும் இந்தியப் பெருமுதலாளிகளினதும் கடும் போக்கு, தீர்வை எட்டத் தடையாகிறது.

அதேவேளை, இலங்கை, இந்திய அரசாங்கங்கள், இருதரப்பு மீனவர்களினது பிரச்சினைகளையும் மோதல்களையும் அத்துமீறல்களையும் வைத்து, தத்தமது அரசியல் இலாபங்களைப் பெறுகின்றன.

இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினையில் இந்தியாவின்பிராந்தியநலன்,இந்தியப்பெருமுதலைகளின் நலன், இலங்கை அரசாங்கத்தின் இயலாமை என்பன பின்னிப்பிணைந்துள்ளன. மொத்தத்தில், இந்திய, இலங்கை அரசாங்கங்கள் கடல்வளத்தைப் பாதுகாப்பது பற்றி எவ்வித அக்கறையையும் காட்டவில்லை.

பிரச்சினைப்படுவதும் மோதுவதும் இரு புறத்திலும் தமிழ் மீனவர்கள் என்பதால், இலங்கை அரசாங்கம் இம் மீனவர் பிரச்சினையில் அதிக ஆர்வம் காட்டாதிருப்பதும் அவதானிக்கக் கூடியதாகும்.

இப்பிரச்சினையை இரண்டு அரசாங்கங்களோ தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகளோ தீர்க்கக்கூடியதல்ல என்பதை உணர்ந்திருக்கிறோம். ஏனெனில், இவர்களில் எவருக்கும் இப்பிரச்சினைக்குத் தீர்வு தேடும் அக்கறையில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.



ஆனாலும் கடந்த நல்லாட்சிக் காலத்தில் மூன்று கட்டப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுள்ளது. இலங்கை

தொடர்ச்சி: பக்கம் 15

# தீபச்செல்வனின் புத்தகங்கள் மீதான தடையும்
# அநுர அரசாங்கத்தின் முன்மொழிவும்

பத்திரிகையாளர்- அ.நிக்ஸன்






- **தமிழர்களை இழிவுபடுத்தும் "மகாவம்சம்" புனித நூல் - தீபச்செல்வனின் புத்தகங்கள் தேசத் துரோகமா?**
- **ஜனநாயகத்துக்கு முரணான இலங்கை அரசியல் யாப்பின் சில சரத்துகள்.**
- **தண்டனைக் கோவை 120 ஆவது பிரிவு, 14 ஆவது பிரிவுக்கு நடைமுறைத் தடைக் கல்!!!**
- **பாடநூல்களில் சிங்கள இனவாதம் பரவும் சூழலில், தமிழ் படைப்புகளுக்கு தடைகள் வரும்.**
- **"மாற்றம்" - "சோசலிசம்" - "முறைமை மாற்றம்" (System Change) என்று மார்தட்டிக் கொண்டு, 2024 இல் ஆட்சிப் பீடம் ஏறிய அநுர அரசாங்கம், ஈழத் தமிழர்களின் கருத்து வெளிப்பாட்டைத் தடுப்பதில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது.**

கிளிநொச்சியில் வாழும் எழுத்தாளர்- ஊடகவியலாளர் தீபச்செல்வனின் இரண்டு புத்தகங்கள் இலங்கை சுங்க திணைக்கள அதிகாரிகளினால் தடுக்கப்பட்டமை இதனை எடுத்துக் காட்டுகிறது.

தண்டனைச் சட்டக்கோவையின் 120 ஆவது பிரிவின் கீழ் இரண்டு புத்தகங்களும் "அரச துரோகம்" என முத்திரை குத்தப்பட்டு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் மீது வெறுப்பைத் தூண்டுதல் அல்லது கலகத்தை விளைவித்தல் என்பதே பிரிவு 120 ஆகும். ஆகவே, தீபச்செல்வனின் புத்தகங்கள், கலகத்தை விளைவிக்கலாம் என கருதியே சுங்கத் திணைக்கள கட்டடத்திற்கு வெளியே கொண்டு செல்ல முடியாமல் தடுக்கப்பட்டிருக்கிறது போலும்.


ஆனால், அரசு அற்ற ஒரு தேசிய இனத்தின் அரசியல் உரிமைகள் பற்றிய விடயங்களை கதை - நாவல் என்ற கலை, இலக்கிய படைப்புகள் ஊடாக எழுதும் உரிமை அனைவருக்கும் உண்டு.

ஆனால், இலங்கைத்தீவில், கலை - இலக்கியப் படைப்புகளில் சிங்கள இனவாத அரசியல் புகுந்துள்ளது. தமிழர்களை வந்தேறு குடிகளாகக் கருதும் இலக்கியப் படைப்புகள் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில் அதிகமாக வெளிவருகின்றன.

குறிப்பாக இலங்கைத்தீவின் வரலாற்றைச் சொல்லும் மகாவம்சம், தமிழர்களின் மரபுரிமை வரலாறுகளை நீக்கம் செய்துள்ளது. தமிழர்கள் இலங்கையில் வந்தேறு குடிகள் என்று இழிவுபடுத்தி மகாவம்சத்தில் கற்பிதம் செய்யப்படுகிறது.

ஆகவே, தமிழ் இனத்தை இழிவுபடுத்தும் மகாவம்ச நூல், ICCPR சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட வேண்டும் அல்லவா?

மாறாக புனித நூலாக அங்கீகரிக்கப்பட்டு, அரச வெளியீடாகவும் பிரகடணம் செய்யப்பட்டுள்ளதே. இப் பின்னணியில் தீபச்செல்வனின் தமிழ் புத்தகங்களை எவ்வாறு தடை செய்ய முடியும்??? அப் புத்தகங்கள் ஒரு இனத்தின் "அரசியல் விடுதலை" என்பதை நாகரிகமாக பறைசாற்றுகிறது. மாறாக அது அரச துரோகம் அல்ல.


ශ්‍රී ලංකා රේගුව
இலங்கைச் சுங்கம்
Sri Lanka Customs

Customs House, No. 40, Main Street, Colombo 11.
Web Site: www.customs.gov.lk

My No: DGCO/Other/01
Your No:
Date: 20.04.2026

The Proprietor,
Onereach Lanka (Pvt) Ltd,
820/9, Kanthi Mawatha,
Hunupitiya,
Wattala.

Dear Sir / Madam

**Importation of Printed Books**
**Cusdec No. 47995 of 18.03.2026**

This has reference to the consignment of books imported and declared to Customs by your company under item 37 of CusDec no. 47995 dated 18.03.2026.

02. I am pleased to inform you that, based on the recommendations of the Arts Council of Sri Lanka, State Panel of Literature of the Ministry of Buddhasasana, Religious and Cultural Affairs and the Ministry of Defence, the books titled "Bayangaravaathi" and "Cynide" are now released, along with other books found in the consignment except the two books referred to in the paragraph 03 below.

03. I regret to inform you that, based on the same recommendations referred to above, the two books titled "Elluttal nan Yuttam Ceykiren" and "Ippothum Inge Irandu Thesangalthaan" cannot be released as they have been found to contain matter calculated to lead to acts made punishable under section 120 of the Panel Code, read with schedule B to the Customs Ordinance (Chapter 235).

Yours faithfully

S.P. Arukgoda
Director General of Customs.

Copy: Mr. Deepachelvan Pratheepan

ஆகவே, பாடசாலை மாணவர்களின் பாடநூல்கள் மூலமாக ஏற்கனவே பௌத்த இனவாதம் பரப்பப்படும் சூழலில், தீபச்செல்வன் போன்ற படைப்பாளிகளின் புத்தகங்கள் தடுக்கப்படும் என்ற பலமான தகவலை, அநுர அரசாங்கம், ஈழத்தமிழ் மக்களுக்கு உரக்கச் சொல்லியிருக்கிறது.

தற்போது நடைமுறையில் உள்ள 1978 ஆம் ஆண்டு உருவான இரண்டாவது அரசியல் யாப்புச் சட்டங்களை நோக்கினால்.... ஜனநாயகத்துக்கு மாறான பல முரண்பாடுகளை அவதானிக்க முடியும்...

குறிப்பாக, இலங்கை அரசியல் யாப்பின் 14 (1) (அ) உறுப்புரை, (Article) "ஒவ்வொரு பிரஜையும் பேச்சுச் சுதந்திரம் - வெளியீட்டுச் சுதந்திரம் உட்பட கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்திற்கும் உரித்துடையவர் ஆவார்" எனக் கூறுகிறது.

ஆனால், இது "முழுமையானது" (Absolute) அல்ல. அரசியலமைப்பின் 15 (2) மற்றும் 15 (7) ஆகிய உறுப்புரைகள், 14 ஆவது உறுப்புரையில் கூறப்பட்டுள்ள உரிமைகளுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்கின்றன.

குறிப்பாக, தேசிய பாதுகாப்பு (National Security) பொது ஒழுங்கு (Public Order), இன மற்றும் மத நல்லிணக்கம், நீதிமன்ற அவமதிப்பு, அவதூறு ஆகிய காரணங்களுக்காகக் கருத்துச் சுதந்திரத்தை சட்டத்தின் மூலம் மட்டுப்படுத்த அரசுக்கு முழு அதிகாரம் உண்டு.

இங்கே "இலங்கைத் தேசிய பாதுகாப்பு" என்பது தமிழர்களின் அரசியல் விடுதலையோடு தொடர்புள்ளது என்பதையும் அவதானிப்பது அவசியம்... தண்டனைச் சட்டக் கோவையின் 120 ஆவது பிரிவு, அரசாங்கத்தின் மீது வெறுப்பைத் தூண்டுதல் அல்லது கலகத்தை விளைவித்தலாகும். ஆனால், 120 ஆவது 14 ஆவது உறுப்புரைக்கு நடைமுறைத் தடைக் கல்லாகும்.

இந்த முரண்பாடுகள் பற்றி சட்டத்தரணிகள் மத்தியில் பல விவாதங்கள் உள்ளன. ஆகவே, இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் ஜனநாயகத்துக்கு முரணான பல சரத்துகள் உண்டு என்பதை சட்ட வல்லுநர்கள், அரசியல் விஞ்ஞான வல்லுநர்கள் எவரும் மறுக்கப் போவதில்லை.

கொழும்பில் இயங்கும் மற்றும் கொள்கை ஆய்வு மையம், (Centre for Policy Alternatives -CPA) அரசியல் யாப்பில் உள்ள ஜனநாயகத்தக்கு முரணான விதிகளை பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் காட்டியிருக்கிறது.

மூத்த சட்டத்தரணி கிஷாலி பின்டோ ஜயவர்தன, (Kishali Pinto-Jayawardena) 20 ஆவது திருத்தத்தை கடுமையாக விமர்சித்திருக்கிறார். ஜனாதிபதியின் அதிகாரங்களை அவர், கடுமையாக சாடுகிறார்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் வோல்கர் டர்க் (Volker Türk) 2024 - 2025 ஆம் ஆண்டு அறிக்கைகளில் இலங்கையின் சட்டச் சூழல் குறித்துக் கவலை வெளியிட்டிருக்கிறார்.

ஜனநாயகக் கட்டுக்கோப்புகள் மற்றும் சமநிலைகள் (Checks and balances) பலவீனமடைந்துள்ளதாகவும், சிவில் சமூகத்தினர் - ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாகவும் ஐ.நா அறிக்கைகளில் உண்டு.

அரசியல் யாப்பின் 16 ஆவது உறுப்புரை (Existing Law Clause), அரசியலமைப்புக்கு முரணான பழைய சட்டங்களையும் தொடர்ந்து செல்லுபடியாக்க அனுமதிப்பது ஒரு "அரசியலமைப்புப் பொறி" (Constitutional Trap) என்று ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு (Asian Human Rights Commission Asian Human Rights Commission - AHRC) 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐநாவின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கானசர்வதேசஉடன்படிக்கை (International Covenant on Civil and Political Rights -ICCPR), 2007 இல் சட்டமாக்கப்பட்ட பின்னர், கருத்துச் சுதந்திரத்தை முடக்க பயன்படுத்தப்படுவதாக சட்ட வல்லுநர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

PTA எனப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் அல்லது அதன் பயன்பாட்டிற்குத் தற் காலிகத் தடை (Moratorium) விதிக்க வேண்டும் என ஐநா வலியுறுத்தி வருகிறது.

ஆனாலும், மாறி மாறி பதவிக்கு வரும் சிங்கள அரசியல் தலைவர்கள் எவருமே இந்த அறிவுறுத்தல்களை கண்டு கொள்வதில்லை. மாறாக இனவாத நோக்கில் அரசியல் யாப்பில் திருத்தங்கள் செய்யப்படுகின்றன.

அநுர அரசாங்கத்தின் 2026 ஆம் ஆண்டின் புதிய முன்மொழிவுகளின்படி, பயங்கரவாதத்தை அல்லது பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் வகையில் சொற்களை பயன்

தொடர்ச்சி: பக்கம் 17

# நீலகாமம் சம்பவம்: மலையகத்தின் காணி உரிமைப் போராட்டமும் அதிகார அராஜகமும்

மருதன் ராம்




இலங்கையின் மலையகப் பெருந்தோட்டங்களை மையமாகக் கொண்ட சமூக அமைப்புகள், நூற்றாண்டுகளாக இலங்கை பொருளாதார மையங்களாக இருந்தாலும், அந்த மண்ணில் வாழ்ந்து உழைக்கும் மக்களுக்கு அடிப்படை மனித உரிமைகளும், காணி உரிமைகளும், பாதுகாப்பான குடியிருப்பும் இன்னும் முழுமையாக கிடைக்காத துயரமான உண்மை மறுக்க முடியாத ஒன்றாக உள்ளது. இரத்தினபுரி மாவட்டத்தின் கஹவத்தை நீலகாமம் பெருந்தோட்டத்தில் நிகழ்ந்த அண்மைய சம்பவம், இந்த நீண்டகால அநீதியின் மற்றொரு வெளிப்பாடாகக் கருதப்பட வேண்டும்.



குறித்த தோட்டத்தில் உள்ள வீடற்ற பொதுமகன் ஒருவர் தற்காலிக குடியிருப்பு அமைத்ததாக கூறப்படும் சூழலில், அந்த வீட்டை அகற்ற முற்பட்டபோது மோதல் ஏற்பட்டதாக காவல்துறை தகவல் வெளியிட்டுள்ளது. இதன் போது நால்வர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

வீடு அமைத்த நபர் கைது செய்யப் பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் கூறப் படுகிறது. ஆனால் இதே சம்பவத்தை அப்பகுதி மக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் முன்வைக்கும் பார்வையில் பார்க்கும் போது, இது வெறும் சட்ட ஒழுங்கு பிரச்சினையல்ல என்றும் இது காணியற்ற மக்களின் வாழ்வுரிமையை ஒடுக்க முயலும் அதிகாரமிக்க அமைப்புகளின் தாக்குதல் எனும் தீவிரமான அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினையாக மாறுகி றது என்றும் தெளிவாகிறது.

மலையகத் தமிழ் மக்கள் இலங்கையின் தேயிலை பொருளாதாரத்தை தலைமுறைகளாக தாங்கி நிற்கும் சமூகமாக இருந்தும், அவர்கள் வாழும் நிலத்தின் உரிமையாளர்களாக இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. பல குடும்பங்கள் இன்னும் “லயன் அறைகள்” என்ற நெருக்கமான பழைய தொழிலாளர் குடியிருப்புகளில் வாழ்கின்றன. தனி காணி இல்லை.


தனி வீடு அமைக்கும் வாய்ப்பு இல்லை. குடும்பங்கள் பெருகினாலும் வாழ்விடம் பெருகவில்லை. ஒரு குடும்பத்தில் பெற்றோர், திரு மணமான பிள்ளைகள், பேரக் குழந்தைகள் என மூன்று தலைமுறைகள் கூட ஒரே குறுகிய குடியிருப்பில் வாழும் நிலை இன்றும் கூட காணப்படுகிறது. இந்நிலையில், பயன்படுத்தப்படாத தரிசு காணிகளில் தற்காலிக குடியிருப்பு அமைக்க மக்கள் முயல்வது சட்ட விரோத செயல் என்ற பெயரில் தடுக்கப்படுவது நீதியல்ல.

அது மனித வாழ்வின் அடிப்படைத் தேவையை மறுப்பதாகும். நீலகாமம் சம்பவமும் இதே சமூக உண்மையை வெளிப்படுத்துகிறது. வீடற்ற ஒருவர் தற்காலிக குடியிருப்பு அமைத்துள்ளார். அவருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால் ஏன் அவர் அப்படி ஒரு முயற்சி செய்தார்? அவருக்கு அரசு வீடு கொடுத்ததா? காணி ஒதுக்கீடு செய்யப்பட்டதா? மாற்று வசதி வழங்கப்பட்டதா? இந்த கேள்விகளே முக்கியமானவை.

### சட்டம் யாருக்காக? அதிகாரம் யாரிடம்?

குறித்த நபர் தற்காலிக குடியிருப்பை அமைத்த பின்னர் தோட்ட நிர்வாகம் காவல்நிலையத்தில் முறைப்பாடு செய்ததாக கூறப்படுகிறது. அதன்பின் விசாரணைக்கு செல்லும் முன்பே இரு தரப்பினரிடையே மோதல் ஏற்பட்டதாக காவல்துறை கூறியுள்ளது. மேலும், குறித்த தோட்டத்திற்கு பாதுகாப்பு வழங்குவதாக தெரிவிக்கப்படும் தனியார் பாதுகாப்பு பிரிவினராலேயே தற்காலிக வீடு சேதப்படுத்தப்பட்டதாக காவல்துறை அதிகாரி குறிப்பிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். ஒரு குடியிருப்பு சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்தாலும், அதை அகற்றும் அதிகாரம் தனியார் பாதுகாப்புக் குழுவிற்கு உள்ளதா? நீதிமன்ற உத்தரவு இன்றி, சட்டப்படி அறிவிப்பு இன்றி, குடியிருப்பை உடைத்துத் தரைமட்டமாக்கும் உரிமை யாருக்கும் இல்லை. இவ்வாறு நடந்திருந்தால், அது சட்டத்தின் மீதான திறந்த மீறலாகும்.




சில பெருந்தோட்டங்களில் நிர்வாகம் தன்னிச்சையான அதிகார அமைப்பாக இயங்குகிறது. மக்கள் குடிமக்களாக அல்லாது கட்டுப்படுத்த வேண்டிய தொழிலாளர்களாகவே பார்க்கப்படுகிறார்கள். இதுவே காலனித்துவ மனப்பான்மை தொடர்வதாகும். குறிப்பாக காவல்துறையினரின் நடவடிக்கையால் தற்காலிக இருப்பிடத்தை அமைத்த நபரே கைது செய்யப்பட்டார். எனினும் குறித்த நபரை தாக்கி தற்காலிக குடியிருப்பை தரைமட்டமாக்கிய தரப்பினருக்கு எதிரான சட்ட நடவடிக்கை குறித்து இதுவரையில் தெளிவான தரவுகள் வெளிப்படுத்தப்படவில்லை.

இச்சம்பவம் குறித்து கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கடந்த ஆட்சிகளிலும் இதுபோன்ற அராஜகங்களை தாம் நேரில் சென்று தடுத்ததாகவும், இப்போது ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். அவர் தமது சமூக வலைத்தள பதிவில் பயன்படுத்திய “ஹெல்மெட் குண்டர்கள்” என்ற சொல், தோட்ட நிர்வாகங்களின் பெயரில் செயல்படும் முகமூடி வன்முறை அணிகளை சுட்டிக்காட்டுகிறது. அவர் மேலும், “இராணுவத்தில் இருந்து ஓடி வந்தவர்களை கொண்டு தோட்ட நிர்வாகங்கள் குண்டர் படை அமைக்கக் கூடாது” என வலியுறுத்தியுள்ளார். இந்தக் கருத்தை வெறும் அரசியல் கோஷமாக பார்க்க முடியாது. இந்த சம்பவம் மலையகத்தில் பல ஆண்டுகளாக பேசப்பட்டு வரும் ஒரு அச்சத்தை வெளிப்படுத்துகிறது. சில தோட்டங்களில் முன்னாள் ஆயுதப் பயிற்சி பெற்றவர்களையோ, வன்முறைக்கு பழகியவர்களையோ பாதுகாப்பு பணியாளர்களாக அமர்த்தி மக்களை அச்சுறுத்தும் கலாசாரம் இருப்பதாக மக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இந்த குற்றச்சாட்டுகள் உண்மையெனில், அது தேசிய பாதுகாப்பு மட்டத்திலான விசாரணைக்கு உரியது. தனியார் பாதுகாப்பு என்ற பெயரில் ஆயுத மனப்பான்மை கொண்ட குழுக்கள் குடிமக்கள் மீது தாக்குதல் நடத்த அனுமதிக்கப்பட முடியாது. இச்சம்பவத்தில் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் உடனடியாக சந்தேகநபர்களை கைது செய்யுமாறு பணிப்புரை விடுத்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன. பாதிக்கப்பட்ட தொழிலாளிக்கு நிவாரணம் வழங்குமாறும் அவர் தோட்ட நிர்வாகத்திடம் அறிவுறுத்தியுள்ளார்.

ஒருபுறம், அரசியல் தலையீடு இல்லையெனில் பல மலையகப் பிரச்சினைகள் அதிகாரப்பூர்வ அலுவலகங்களில் புதைந்து போகும். காவல்துறை நடவடிக்கை மந்தமாகும். நிர்வாகம் மக்களின் குரலை புறக்கணிக்கும். எனவே, மக்களின் சார்பாக அரசியல்வாதிகள் தலையிடுவது அவசியமான ஒன்றாக உள்ளது.



மறுபுறம், ஒவ்வொரு மனித உரிமை மீறலுக்கும் அரசியல்வாதி அழுத்தம் தேவைப்படும் நிலைமை இருந்தால், அதுவே நிர்வாகத் தோல்வியின் அடையாளமாகும். சட்டம் தானாக இயங்க வேண்டும். ஒரு ஏழை தொழிலாளியின் வீடு உடைக்கப்பட்டால், அமைச்சர் அழைத்த பிறகே நடவடிக்கை எடுக்கப்படுவது ஜனநாயகத்தின் வெற்றியாக கருத முடியாது.

இதேவேளை, இந்த சம்பவத்தின் பின்னணியில் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் முன்வைத்த இரண்டு முக்கிய கோரிக்கைகள் மலையக எதிர்கால அரசியலின் மையமாக மாறக்கூடியவையாகும். தோட்டங்களில் தரிசு காணிகளில் வீடற்றோருக்கு குடியிருப்புகள் அமைக்க உரிமை வழங்க வேண்டும் என்றும் முன்னாள் இராணுவத்தினர் அல்லது வன்முறைப் பின்னணி கொண்டவர்களை கொண்டு தனியார் குண்டர் படைகள் அமைக்கக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த இரண்டு கோரிக்கைகளும் அடிப்படை மனித உரிமை மற்றும் பாதுகாப்பு கோரிக்கைகளாகும். காணி இல்லாமல் மக்கள் முன்னேற முடியாது. பாதுகாப்பு இல்லாமல் சமூக அமைதி உருவாகாது. காணி உரிமை என்பது

தொடர்ச்சி: பக்கம் 17




# தமிழக சட்ட மன்றத் தேர்தல் 2026

## இரு முனைப் போட்டியில் இருந்து பலமுனை நோக்கி!

**திலீபன்**

தமிழக அரசியல் வரலாற்றில் 2026 சட்டமன்றத் தேர்தல் ஒருமுக்கியமான திருப்புமுனையாகக் கருதப்படுகிறது. ஆறுதசாப்தங்களாக நிலவி வரும் இருமுனை அரசியல் போட்டியைத் தாண்டி, ஒரு பலமுனைப் போட்டிச் சூழலை நோக்கி மாநிலம் நகர்வதை இது காட்டுகிறது. தற்போதைய ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக) தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி (SPA), பிரதான எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகம் (அதிமுக) தலைமையிலான கூட்டணிமற்றும் நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகம் (TVK), நாம் தமிழர் கட்சி (NTK) என இந்தத் தேர்தல் பலபரிமாணங்களைக் கொண்டுள்ளது. குறிப்பாக, வாக்காளர்பட்டியலில் மேற்கொள்ளப்பட்ட சிறப்புத் தீவிரத் திருத்தம் (Special Intensive Revision - SIR) மற்றும் அதன் விளைவாகக் காணப்பட்ட வரலாறு காணாத 85.15% வாக்குப்பதிவு ஆகியவை இந்தத் தேர்தலின் முடிவுகளைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக உள்ளன.

தமிழகத்தின் அரசியல் களம் கடந்த காலங்களில் கண்டிராத ஒரு புதிய பரிமாணத்தை எட்டியுள்ளது. 1967 ஆம் ஆண்டுமுதல் திராவிடக் கட்சிகள் மட்டுமே ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து வரும் நிலையில், தற்போதுள்ள அரசியல் சூழல் அந்த நிலையை உடைக்க முற்படும் சக்திகளின் வரவால் கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது. குறிப்பாக, திராவிட மாடல்ஆட்சியை முன்னிறுத்தும் திமுக, தனது செல்வாக்கை மீட்டெடுக்கத் துடிக்கும் அதிமுக, மற்றும் இளைஞர்களின் நம்பிக்கையாகத் தன்னைக் காட்டும் தவெக, தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி உழைத்த நாம் தமிழர் எனப் போட்டி கடுமையாக இருந்தது.

2026 தேர்தலைப் பொறுத்தவரை, கூட்டணிக் கணிதங்கள் கடந்த காலங்களைக் காட்டிலும் மிகவும் சிக்கலானதாக மாறியுள்ளன. 2024 மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்ற அதே கட்டமைப்பைத் தக்கவைக்க திமுக முயற்சி செய்கிறது. திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி(SPA) தனது சித்தாந்தப் பிணைப்பை வலுவாகக்கொண்டுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திமுககூட்டணி, 'திராவிட மாடல்' ஆட்சியைத் தொடர வேண்டும் என்ற முழக்கத்துடன் களமிறங்கி இருந்தது. இந்தக்கூட்டணியில் இந்திய தேசிய காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி (VCK), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) (CPI-M) மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் (MDMK) ஆகியகட்சிகள் இடம்பெற்றிருந்தன. இந்தக் கூட்டணியின் பலமாகப் பார்க்கப்படுவது அடிமட்ட அளவில் உள்ள வலுவான கட்சி இயந்திரம் மற்றும் அரசின் நலத்திட்டங்கள் ஆகும். குறிப்பாக, மகளிருக்கான உதவித் தொகை மற்றும் இலவசப் பேருந்துப் பயணம் போன்றவை பெண்களின் வாக்குகளைத் தக்கவைக்க உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திமுகவின் தேர்தல் வியூகம் என்பது தனது ஐந்து ஆண்டுகால செயற்பாடுகளை முன்னிலைப்படுத்தியதோடு மத்திய பாஜக அரசின் மீதான விமர்சனங்களையும் உள்ளடக்கியதாக இருந்தது. முதலமைச்சர் ஸ்டாலின் தனது பிரச்சாரத்தின் போது, மாநில உரிமைகள் மற்றும் கூட்டாட்சி தத்துவத்தைப் பாதுகாக்கும் ஒரு அரணாகத் திமுகவை முன்னிறுத்தி வந்தார். குறிப்பாக, மக்கள்தொகை மறுவரையறை (Delimitation) சட்டத்திற்கு எதிராக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் வாக்காளர் முன்வைத்தார்.

2023-ல் பாஜகவுடனான உறவைத் துண்டித்த அதிமுக, 2025 ஏப்ரல் மாதத்தில் மீண்டும் ஒரு உடன்பாட்டிற்கு வந்து எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் கூட்டணியை அமைத்தது. இதில் பாட்டாளி மக்கள் கட்சி (PMK) அன்புமணி அணி, அம்மா மக்கள் முன்னேற்றக்கழகம் (AMMK) போன்ற கட்சிகளும் இணைந்துள்ளன. ஆளுங்கட்சிக்கு எதிரான அதிருப்தி வாக்குகளை ஒருங்கு திரட்டுவதும், மேற்கத்திய மற்றும் வட மாவட்டங்களில் தனது செல்வாக்கை மீட்டெடுப்பதும் இந்தக் கூட்டணியின் முதன்மை இலக்காகும்.

எடப்பாடி பழனிச்சாமி திமுகவின் வாரிசுஅரசியல், சட்ட ஒழுங்குப் பிரச்சனைகள் மற்றும் போதைப்பொருள் புழக்கம் ஆகியவற்றை முதன்மையான குற்றச்சாட்டாக முன்வைத்தது. அதிமுகவின் பலம்அதன் கிராமப்புற வாக்கு வங்கியில் உள்ளது. குறிப்பாக, கொங்கு மண்டலத்தில் அக்கட்சி கொண்டுள்ள வலுவான பிடிப்பு 2026 தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடிகர் விஜய் 2024 பெப்ரவரியில் தமிழக வெற்றிக் கழகத்தைத் தொடங்கியபோது, அது ஒரு சாதாரண சினிமா நடிகரின்அரசியல் வருகையாகவே பார்க்கப்பட்டது. ஆனால், 2026 தேர்தல் களத்தில் தவெக ஒரு தீவிரமான போட்டியாளராக உருவெடுத்துள்ளது. 233 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ள விஜய், தன்னை திமுகவுக்கான நேரடி மாற்றாக முன்னிறுத்தினார்.

தவெக-வின் வருகை குறிப்பாக 18 முதல் 29 வயதுக்குட்பட்ட 1.21 கோடிக்கும் அதிகமான இளைஞர்களை இலக்காகக்கொண்டுள்ளதை ஆய்வுகள் காட்டுகின்றன. விஜய்யின் திரைத்துறைப் புகழ் மற்றும் அவர் முன்வைக்கும் 'நிர்வாகச்சீர்திருத்த'முழக்கங்கள்புதிய வாக்காளர்களிடையே பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இது நிகழ்ந்தால் தமிழக அரசியல்வரைபடமே மாறும். விஜய்யின் பிரச்சாரப் பாணி வித்தியாசமானதாகவும் குறைந்த நேர உரைகளைக் கொண்டதாகவும் இருந்தது. அவர்தனது பிரச்சாரத்தின் போது ஸ்டாலின் தலைமையிலானஅரசை "ஊழல் அரசு" என்றும், அதிமுக மற்றும் பாஜகவை"மற்றவர்கள்" என்றும் குறிப்பிடுவதன் மூலம் ஒருதனித்துவமான இடைவெளியைப் பேணினார்.அவரதுவருகை ஆளும் கட்சி எதிர்ப்பு வாக்குகளைப் பிரிக்கும்பட்சத்தில், அது திமுகவிற்கு மறைமுகச் சாதகமாக அமையும் என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சீமானின் நாம் தமிழர் கட்சி மற்றைய கட்சிகள் எல்லாவற்றையும் கடந்து புதிய அரசியல் மாற்றத்துக்கான போக்கை வெளிப்படுத்தியது. 117 ஆண் வேட்பாளர்களையும் 117 பெண் வேட்பாளர்களையும் அது வழக்கம் போல் முன்னிறுத்தியது. பாரம்பரிய கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனம் போலல்லாது அது புதிய அணுகுமுறையோடு மக்கள் முன் நின்றது. தமிழகம் இதுவரை சந்தித்து வந்த, வருகின்ற பிற்போக்கான மக்கள் நலன்களைப் பேணாத திட்டங்களுக்கு, இலவசங்களுக்கு பதிலாக அவர்களது வாழ்க்கையை மேம்படுத்தக்கூடிய இயற்கைப் பாதுகாக்கின்ற பல மாற்றுத் திட்டங்களை முன் வைத்தது. கொள்கைப் பிடிப்போடு கூடிய மக்கள் அரசியலை அது முன்வைத்தது.

2026 தேர்தலின் மிக முக்கியமான புள்ளிவிவர அம்சம் வாக்காளர் பட்டியலில் மேற்கொள்ளப்பட்ட 'SIR' (Special Intensive Revision) திருத்தம் ஆகும். தேர்தல் ஆணையம் 2025 அக்டோபரில் 6.41 கோடி வாக்காளர்கள் இருந்த பட்டியலில்இருந்து இறப்பு, இடம்பெயர்வு மற்றும் இரட்டைப் பதிவுகள்காரணமாக சுமார் 74 லட்சம் பெயர்களை நீக்கியது. தேர்தல் ஆணையத்தின் இந்தத் தீவிரத் திருத்தம் காரணமாக, தமிழகத்தின் இறுதி வாக்காளர் எண்ணிக்கை 5.67 கோடியாகக் குறைந்தது. இதில் பெண்கள் 2.89 கோடி, ஆண்கள் 2.77 கோடி மற்றும் மூன்றாம் பாலினத்தவர் 7,617 பேர்அடங்குவர். இந்தத் திருத்தம் "வாக்குப்பதிவு சதவீதம்" அதிகரித்ததற்கு ஒரு முக்கியமான புள்ளியியல் காரணியாகும். அதாவது, வாக்காளர் எண்ணிக்கை குறைந்ததால், பதிவான வாக்குகளின் சதவீதம் தானாகவே உயர்ந்துள்ளது.

2026 ஏப்ரல் 23 அன்று நடைபெற்ற வாக்குப்பதிவில் தமிழகம் 85.15% என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இலக்கை எட்டியது.இது 2021 ஆம் ஆண்டு தேர்தலின் 72.81% உடன் ஒப்பிடும்போது மிகப்பெரிய உயர்வாகும். மாவட்ட வாரியாகப்பார்க்கும்போது, கரூர் (93.40%) மற்றும் சேலம் (90.23%) மாவட்டங்கள் முன்னணியில் உள்ளன.

சென்னையில் வாக்குப்பதிவு சதவீதம் அதிகரித்திருந்தாலும், பதிவான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 2021-ஐ விடசுமார் 47,000 குறைவாகவே உள்ளது என்பது ஒருமுரண்பாடான உண்மையாகும். இது 'SIR' திருத்தத்தின் விளைவாக வாக்காளர் பட்டியல் சுருக்கப்பட்டதையே காட்டுகிறது. இருப்பினும், நகர்ப்புற வாக்காளர்கள் முன்பைவிட அதிக ஆர்வம் காட்டியுள்ளனர் என்பதையும் மறுக்கமுடியாது.

2026 சட்டமன்றத் தேர்தல்கள் பல மாநிலங்களில் ஒரேகாலகட்டத்தில் நடைபெற்றதால், 'SIR' திருத்தத்தின் விளைவுகளை ஒப்பிட்டுப் பார்க்க ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது.குறிப்பாக மேற்கு வங்கம் மற்றும் கேரளாவின் தரவுகள்தமிழகத்தின் போக்கைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

மேற்கு வங்கத்தில் 'SIR' மூலம் சுமார் 91 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். இதன் விளைவாக அங்கு முதற்கட்டத்தேர்தலில் 92.35% வாக்குப்பதிவு பதிவாகியுள்ளது. தமிழகத்தைப் போலவே இங்கும் வாக்காளர் எண்ணிக்கைகுறைந்ததால் சதவீதம் அதிகரித்துள்ளது. இருப்பினும், மேற்கு வங்கத்தில் நிலவும் அரசியல் மோதல்கள் மற்றும் ஆளும்கட்சி-எதிர்க்கட்சி இடையேயான கடும் போட்டி மக்களைஅதிக அளவில் வாக்குச்சாவடிகளுக்கு வரவழைத்துள்ளன.

கேரளாவில் 2026 ஏப்ரல் 9 அன்று தேர்தல் நடைபெற்றது.அங்கு வாக்குப்பதிவு சதவீதம் 79.63% ஆகப் பதிவானது. இது 2021 தேர்தலின் 74.06% உடன் ஒப்பிடும்போது ஒரு நியாயமான உயர்வாகும். கேரளாவிலும் பெண்கள் அதிக அளவில் (81.19%) வாக்களித்துள்ளனர். தமிழகத்துடன் ஒப்பிடுகையில், கேரளாவில் 'SIR' திருத்தத்தின் தாக்கம் குறை வாகவே இருந்தது, ஆனால் அங்கு நிலவும் இரு முனைப் போட்டி (LDF vs UDF) எப்போதும் போல் வலுவாக இருந்தது.

இந்த ஒப்பீட்டின் மூலம் தேர்தல் ஆணையம் மேற்கொண்ட வாக்காளர் பட்டியல் சீரமைப்பு நாடு முழுவதும் ஒரு பொதுவான சதவீத உயர்வைஏற்படுத்தியுள்ளது. அதே நேரத்தில், ஒவ்வொரு மாநிலத்திலும்நிலவும் தனித்துவமான அரசியல் காரணிகள் அந்தந்தவாக்குப்பதிவு அளவுகளைத் தீர்மானித்துள்ளன.

2026 சட்டமன்றத் தேர்தல் அமைதியான முறையில்

தொடர்ச்சி: பக்கம் 15


பாராளுமன்றக் கண்காட்சி
உண்மைகள் உறங்காது
தமிழ் இனப்படுகொலை 1948 – 2026
13 வைகாசி 2026 ; காலை 11:00 தொடக்கம் மாலை 4:00
Australian Parliment House, Canbera ACT 2600
Dining Room - 1
கண்காட்சி பற்றி
1948 முதல் இன்று வரை இலங்கை அரசால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இனப்படுகொலையின் உண்மைகளை இந்தக் கண்காட்சி பதிவு செய்கிறது.
வரலாற்று காலவரிசைகள், ஆதாரங்கள் மற்றும் மக்களின் வாழ்வனுபவங்களின் மூலம், பல தசாப்தங்களாக தொடர்ந்து நடைபெற்று வரும் அமைப்புசார்ந்த வன்முறை, கட்டாய இடம்பெயர்வு மற்றும் அநீதிகளை இது வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது.
நிகழ்ச்சி நிரல்
• நாள் முழுவதும் கண்காட்சி திறந்திருக்கும்
• இடைவேளைகளில் பேச்சாளர்களின் உரையாடல்கள்
கலந்து கொள்வதன் அவசியம்
• தமிழ் இனப்படுகொலையின் வரலாற்றை அறிந்து கொள்
• சமூகத்தின் குரல்களை கேட்க
• மனித உரிமை ஆதரவாளர்கள் மற்றும் கொள்கை வடிவமைப்பாளர்களுடன் கலந்துரையாட
• நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்காக ஒன்றிணைய
தமிழ் ஏதிலிகள் கழகம்
Tamil Refugee Council
KALYANI INPAKUMAR
TRC NSW COORDINATOR
0425 306 933




# அமெரிக்கா தான் உலகை ஆளுகிறது என்ற எண்ணம் தவறானது

**அமெரிக்க அதிபர் டிரம்ப் போர் நிறுத்தத்தை கால வரையின்றி நீட்டித்துள்ளார் ஆனால் முற்றுகை விலகவில்லை இந்த நிலையில். மோதல் மற்றும் அதற்கான சாத்தியமான தீர்வு என்ன? என்பது குறித்து பேரசிரியர் ஜெப்ரி சாக்ஸ் *(Prof. Jeffrey Saxs)* அவர்கள் சமூகவலைத்தளத்திற்கு வழங்கிய நேர்காணலின் தமிழ் வடிவம் இது.**



குறுகிய கால கண்ணோட்டத்தில், பிரச்சினை என்னவென்றால், அமெரிக்கா போர் நிறுத்தத்தின் மீது ஒரு முற்றுகையை விதித்துள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன்பு, ஒரு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இஸ்ரேல் உடனடியாக பெய்ரூட்டைத் தாக்கி போர் நிறுத்தத்தை மீறியது. ஈரான், ஹார்முஸ் நீர்வழிப்பாதையை மூடி பதிலடி கொடுத்தது. பின்னர், ஈரானிய துறைமுகங்களைத் தடுப்பதாக அமெரிக்கா அறிவித்தது.

அதற்குப் பிறகு, போர் நிறுத்தத்தை மீறிய லெப னான் மீதான தாக்குதல்களை நிறுத்துமாறு இஸ்ரேலை அமெரிக்கா வற்புறுத்தியதாகத் தெரிகிறது.இஸ்ரேல் அதைச் செய்தது. ஹார்முஸ் நீர்வழிப்பாதை திறக்கப்பட்டதாக ஈரான் அறிவித்தது. மேலும் விசித்திரமாக, உண்மையாகச் சொல்வதானால், அதை யாராலும் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

முற்றுகை அமலில் இருக்கும்போது நாங்கள் பேச்சு வார்த்தை நடத்தக்கூட மாட்டோம்” என்று ஈரான்கூறியது. டிரம்ப் தனது காலக்கெடுவை நீட்டித்தார், ஆனால் முற்று கையை நீக்கவில்லை.



இது ஈரானியர்கள் மீது டிரம்ப் கொடுக்கும் அழுத்தம் மட்டுமே என்று மற்றவர்கள் கூறுகிறார்கள். ஆனால் வெளிப் படையாகச் சொன்னால், ஈரானியர்கள் மீது எந்த அழுத்தமும் இல்லை. போர் நிறுத்தம் காலவரையற்றது என்று அமெரிக்கா கூறிவிட்டதால், உலகிற்கு நிம்மதி கிடைக்க வேண்டுமானால், அமெரிக்கா முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும், ஈரான் ஹார்முஸ் ஜலசந்தியைத் திறக்க வேண்டும்.

குறுகிய கால தந்திரோபாயக் கண்ணோட்டத்தில் பார்த்தால், இது உண்மையில் மிகவும் நேரடியானது. அது நம்மை பேச்சுவார்த்தை மேசையில் ஒரு உடன்பாட்டிற்கு வருவது என்ற கேள்விக்கு இட்டுச் செல்லும். அதுவும் சாத்தியம்தான்.

ஆனால் இரு தரப்பினரின் நியாயமான நடத்தையின் அடிப்படையில் மட்டுமே அது சாத்தியமாகும். ஈரானியர்கள் போர் நிறுத்தம் மற்றும் மோதலுக்கு ஒரு முடிவு வேண்டும் என்று கெஞ்சி, தொலைபேசி அழைப்பிற்காக ஆவலுடன் காத்திருக்கிறார்கள் என்று நாம் நம்ப வேண்டும் என டொனால்ட் டிரம்ப் விரும்புகிறார்.

முதல் போர் நிறுத்தம் கூட ஈரானியர்கள் போர் நிறுத்தத்திற்காகக் கெஞ்சியதால் ஏற்படவில்லை என்பது நமக்குத் தெரியும். அமெரிக்கர்கள்தான் போர் நிறுத்தத் திற்காகக் கெஞ்சினார்கள். தற்செயலாக வெளியிடப்பட்ட சில ஆவணங்களில் கூட அதன் தடயங்களை நாம் கண்டோம்.

அவை அமெரிக்கர்களால் பாகிஸ்தானியர்களுக்கு எழுதப்பட்டு, பின்னர் பாகிஸ்தான் அவற்றை ஈரானி யர்களுக்குத் தெரிவித்திருந்தது. எனவே இது அமெரிக் காவிற்கு மிகவும் மோசமான ஒரு நிலை. இது உலகிற்கே பயங்கரமானது, ஆனால் அமெரிக்காவைப் பொறுத்தவரை, அமெரிக்கா ஒரு போரைத் தொடங்கி, அது முழு உலகையும் ஒரு பொருளாதார நெருக்கடியில் தள்ளியுள்ளது. இஸ்ரேலும் அமெரிக்காவும் சேர்ந்து இந்தப் போரைத் தொடங்கின.




இந்த எரிசக்தி நெருக்கடி தொடர்ந்தால் அது பேரழிவை ஏற்படுத்தும். ஆகவே, அமெரிக்கா ஏதாவது செய்ய வேண்டும், ஆனால் அது தற்போது எந்தவொரு முக்கியமான செயலையும் செய்யவில்லை. அது முற்றுகையைத் தொடர்கி றது. “சரி, எங்களிடம் காலவரையற்ற போர்நிறுத்தம் உள்ளது. அது பரவாயில்லை” என்று அது கூறுகிறது. ஆனால் அது ஈரான் மீதான முற்றுகையைத் தொடர்கிறது. அமெரிக்கா செய்ய வேண்டியது என்னவென்றால், முற்றுகையை நீக்கி, அதற்குப் பதிலாக ஈரான் ஹார்முஸ் ஜலசந்தியைத் திறக்க வேண்டும் என்றும், இரு தரப்பினரும் ஈரானின் 10 அம்சத் திட்டத்தின் அடிப்படையில் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் கோருவதாகும்.

வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், ஒவ் வொரு மணி நேரத்தையும் கவனித்தால், அமெரிக்கா தனது சொந்த ஒப்பந்தத்தையே கடைப்பிடிக்க முடியவில்லை.

எனவே இப்போது நாம் கிட்டத்தட்ட முந்தைய

தமிழில்: **ஆர்த்தீகன்**

நிலைக்கே வந்துவிட்டோம், ஏனெனில் ஈரான் மீதான தடைகள் இன்னும் நடைமுறையில் உள்ளன. அணுசக்தி ஒப்பந்தம் எதுவும் இல்லை.



ஈரானியத் தலைமையை ஒரே நாளில் கொன்றுவிட்டு, அதன்பிறகு அமெரிக்காவும் இஸ்ரேலும் நிலைமையைக் கட்டுப்படுத்திவிடும் என்ற மாயையின் அடிப்படையிலேயே இந்தப் போர் தொடங்கப்பட்டது. வெனிசுலாவில் நடந்ததை மாதிரியாகக் கொண்டுதான் இது வடிவமைக்கப்பட்டது. அங்கு அமெரிக்கா வெனிசுலா அதிபரைக் கடத்தியது, ஒருவகையில் துணை அதிபரின் தலையில் துப்பாக்கியை வைத்தது, வெனிசுலா அரசாங்கம், “சரி, உங்கள் வழியிலேயே செய்கிறோம்” என்று கூறியது, மேலும் அமெரிக்கா வெனிசுலாவிலிருந்து எண்ணெயை எடுக்கத் தொடங்கியது. அதுதான் டொனால்ட் டிரம்பின் முன்மாதிரி. ஈரானுடன் இதுதான் நடக்கும் என்று அவர் நினைத்தார்.

இதைப்பற்றி அறிந்த எவரும், இது இப்படி நடக்காது என்றுதான் சொல்லியிருப்பார்கள். இதைத்தான் நெதன் யாகு டிரம்பிடம் விற்றார். என் கருத்துப்படி, நெதன்யாகு ஆரம்பத்திலிருந்தே ஒரு மோசடிக்காரர், அதுபோலவே மீண்டும் மீண்டும். அவன் இன்னொரு ஏமாற்றுக்காரனிடம் ஏமாற்றுபவன். இல்லை, எதுவும் சாதிக்கப்படவில்லை. அவர்கள் நிறைய பேரைக் கொன்றார்கள். அவர்கள் ஈரானின் பல உள்கட்டமைப்புகளை அழித்தார்கள். ஆனால் அது என்ன? அதை ஒரு முடிவு என்று சொல்வது மிகவும் பழமையானது. அரசியல் ரீதியாக எந்த நேர்மறையான பலனும் கிடைக்கவில்லை, மேலும் இதன் மையமாக கூறப்படும் அணுசக்திப் பிரச்சினை போன்ற அடிப்படைக் காரணங்களுக்கும் எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை. இல்லை, இது ஒரு பேரழிவு. ஆனால் இதன் முழு நோக்கமுமே ஒரு மாயை.

உலகெங்கிலும் உள்ள நாடுகள் ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் அழுத்தத்திற்கு உள்ளாகின்றன. ஆனால் இந்த நிலையில் இது அமெரிக்காவை விட ஈரானை பொருளாதார ரீதியாக அதிகமாகப் பாதிக்கிறது. அதாவது, இந்த மோதல் மிகப்பெரிய வலியை ஏற்படுத்துகிறது. எனவே, ஈரான் மற்றும் அமெரிக்காவை மட்டும் பார்க்கும்போது, உங்கள் பார்வையில் யாருக்கு அதிக வலி தாங்கும் சக்தி உள்ளது? அமெரிக்காவைப் பொறுத்தவரை இது ஒரு

**தொடர்ச்சி: பக்கம் 16**




# வான் தாக்குதலில் இருந்து கடற்படை முற்றுகைக்கு ஏன் அமெரிக்கா மாறியது?

வேல்ஸில் இருந்து **அருஸ்**

அமெரிக்க - ஈரான் போர் அமெரிக்காவின் வலிந்து திணிக்கப்பட்ட போர் நிறுத்தத்திற்கும், அதே அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட ஈரான் மீதான கடற்படை முற்றுகைக்கும் இடையில் சிக்கி நிற்கின்றது. அமெரிக்காவின் இந்த முடிவு என்பது ஈரானுக்கு அதிக தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பதுடன், அது உலகின் பொருளாதாரத்தை தொடர்ந்து சீரழிவை நோக்கி தள்ளி வருகின்றது.



அமெரிக்க அதிபர் அடிக்கடி ஈரானை கடுமையாக தாக்கப்போவதாக தெரிவித்தாலும் அவர் அதனை செய்ய தயங்குகின்றார்.அணுவாயுதம் கொண்டு தாக்கும் திட்டங்கள் உள்ளது போன்று பாசாங்கு செய்யப்பட்டிருந்தாலும் அதை தான் செய்யப்போவதில்லை என தெரிவித்துள்ளார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்ப்.

அதாவது வான் படை மற்றும் ஏவுகணை தாக்குதலில் இருந்து அமெரிக்கா ஏன் தற்போது கடற்படை முற்றுகைக்கு மாறியுள்ளது என்ற கேள்வி பல படைத்துறை ஆய்வாளர்களிடம் எழுந்துள்ளது. அதற்கான விடை என்னவெனில், போரை மீண்டும் தொடங்க முடிவு செய்தால், கடுமையான தளவாட மற்றும் இராணுவக் கட்டுப்பாடுகள் உள்ளன.



மேலும் இந்த தாக்குதல் என்பது உலகப் பொருளாதாரத்தில் ஒரு பெரும் பாதிப்பையும், அதிக சுற்றுச்சூழல் அபாயத்தையும், வளைகுடா நாடுகள் ஒரு பின்னடைவையும் எதிர்கொள்ள நேரிடும்.

போர் நிறுத்தம் முடிவுக்கு வந்த நிலையில், ஈரான் பேச்சுவார்த்தை மேசையில் அமர மறுத்த போதும் ட்றம்ப் போரை ஆரம்பிக்கவில்லை.

இதுவரை நடந்த 38 நாள் போரில், சுமார் 400 முதல் 450 இராணுவ விமானங்கள் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டு, பெரும்பாலும் வான்வழித் தாக்குதல்களே நடந்துள்ளன.


இந்தக் காலகட்டத்தில் இந்த விமானங்கள் சுமார் 1.2 முதல் 1.4 பில்லியன் லிட்டர் ஜெட் எரிபொருளைப் பயன் படுத்தியுள்ளன.



இந்த எரிபொருள் ஐரோப்பிய கையிருப்புகளில் இருந்து பெறப்பட்டது, இது அந்த இருப்புகளில் கிட்டத்தட்ட 20% குறைப்பைக் குறிக்கிறது.

சர்வதேச எரிசக்தி முகாமையின் படி, ஹார்முஸ் மீண்டும் திறக்கப்படாவிட்டால், ஐரோப்பாவிடம் இன்னும் 6 வாரங்களுக்குத் தேவையான கையிருப்பு இருக்கும். இருப்பினும், அந்தக் காலகட்டத்தின் பாதியிலேயே இந்த நடவடிக்கை ஒரு நெருக்கடியான நிலையை அடைந்துவிடும். ஒரு புதிய மோதல் இதை வேகப்படுத்தி, வெறும் 2 முதல் 3 வாரங்களில் குழப்பத்தை உருவாக்கும்.

ஆஸ்திரேலியாவிடம் இன்னும் குறைவான கையிருப்புகளே இருக்கும், மேலும் இந்தத் துறை முடங்குவதற்கு மதிப்பிடப்பட்ட 4 வாரங்கள் ஆகும். தென்கிழக்கு ஆசியா இன்னும் மோசமான நிலையில் உள்ளது, அங்கு சில நாடுகள் வெறும் 20 நாட்களுக்கு மட்டுமே கையிருப்பு வைத்துள்ளன.



ஒரு புதிய அலைத் தாக்குதல்களுக்கு ஜெட் எரிபொருள் ஒரு வரம்புக்குட்பட்ட காரணியாக மட்டுமே இருக்கும். ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள முழு விமானப் போக்குவரத்து கட்டமைப்பையும் சீர்குலைக்காமல், ஒரு நீடித்த போருக்கான எந்தவொரு திட்டத்தையும் இது நடைமுறையில் சாத்தியமற்றதாக ஆக்கிவிடும்.

மற்றொரு வரம்பும் இருக்கும்: அது இராணுவ வரம்பு. 38 நாட்கள் நடந்த போரில், அமெரிக்கா சுமார் 1,100 JASSM-ER ஸ்டெல்த் குரூஸ் ஏவுகணைகளைப் பயன்படுத்தியுள்ளது. இதனால், உலகளாவிய இருப்பில் வெறும் 1,500 மட்டுமே எஞ்சியுள்ளன.

தைவான் போன்ற ஒரு சூழலில், சீனாவின் வான் பாதுகாப்பு அமைப்புகளை ஊடுருவிச் செல்வதற்காகவே பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட நீண்ட தூரம் செல்லக் கூடிய ஸ்டெல்த் ரக ஏவுகணை இது.

பாரம்பரிய ஆயுத பலத்தால் தாக்க வேண்டிய ஒரு நாட்டிற்கு எதிராக, பென்டகன் தனது இருப்பில் இருந்த நவீன ஆயுதங்களை பயன்படுத்தி உள்ளது. போரை விரைவில் முடிக்க வேண்டும் என்ற ஆவலாக கூட இருக்கலாம்.



ஒவ்வொன்றும் $3.6 மில்லியன் செலவில் 1,000-க்கும் மேற்பட்ட டோமஹாக் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் போருக்கு முன்பு, இராணுவம் ஆண்டுக்குச் சுமார் 100 டோமஹாக் ஏவுகணைகளை மட்டுமே வாங்கியது. தற்போதைய உற்பத்தி விகிதத்தில், பயன்படுத்தப்பட்ட ஏவுகணைகளுக்குப் பதிலாக புதியவற்றை வாங்க ஒரு தசாப்தம் ஆகும்.

ஆண்டுக்கு சுமார் 600 என்ற எண்ணிக்கையில் உற்பத்தி செய்யப்பட்ட நிலையில்,ஒவ்வொன்றும் கிட்டத்தட்ட $4 மில்லியன் செலவில் 1,200-க்கும் மேற்பட்ட பேட்ரியாட் இடைமறிப்பு ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆகையால், மத்திய கிழக்கில் உண்மையில் கையிருப்பில் உள்ள இடைமறிப்பு ஏவுகணைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும்.

மொத்த செலவு சுமார் $25 முதல் $35 பில்லியன் வரை. தினமும் கிட்டத்தட்ட ஒரு பில்லியன் டொலர்கள். முதல் 48 மணி நேரத்தில் மட்டும் 5.6 பில்லியன் டொலர் மதிப்பிலான ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மீண்டும் ஒரு போர் ஆரம்பித்தால் 400-க்கும் மேற்பட்ட JASSM வழிகாட்டப்பட்ட ஏவுகணைகள் மற்றும் சுமார் 2,800 முதல் 3,000 டோமஹாக் கடற்படைக் குரூஸ் ஏவுகணைகளுடன் அமெரிக்கா நுழையும்.

இவற்றில் ஒரு பகுதி, 15 முதல் 17 அழிப்புக் கப்பல்கள் மற்றும் 5 முதல் 8 நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு ஆயுதம் வழங்கும், அவை விரைவில் இப்பகுதியில் தயாராக இருக்க

தொடர்ச்சி: பக்கம் 16

## இந்திய மீனவர்களின் ... தொடர்ச்சி...

வடபுலத்தில் இருந்து மீனவ அமைப்புக்களைச் சார்ந்தவர் கள் முதற்கட்டம் இந்திய தலைநகர் டெல்லி வரை சென்று இருநாட்டு மீனவர்களும் பேசினார்கள். எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பினுள் நுழைந்து தடைசெய்யப்பட்ட இழுவைமடி மீன்பிடி நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என இலங்கை மீனவர்களால் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

ஆனால் இந்திய தமிழக மீனவர்கள் நமது மீன்பிடி முறையை மாற்றி வேறை முறையிலான மீன் பிடி நடவடிக்கைகளுக்கு மாறுவதற்கு மூன்று வருடம் கால அவகாசம் கோரப்பட்டது.

இரண்டாம் கட்டமாக நல்லாட்சி அரசின் காலத்தில் கடற்றொழில் - நீரியல்வளத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அடங்கலான குழு டெல்லியில் கூடிப் பேசினர். அதன் போது இலங்கை - இந்தியா மீனவர்கள் எல்லை தாண்டுதல் தொடர்பில் நடை முறைக்கு சாத்தியமான சில விடயங்கள் எழுத்து மூலமாக கைச்சாத்திடப்பட்டது.

**1) தமிழக மீனவர்களின் இழுவைப் படகுகளை மாற்றி வேறை முறையிலான தொழில் நடவடிக்கைக்கை மாறும் வரை மூன்று வருட கால அவகாசம்.**

**2) அக் காலம் வரை பாரம்பரிய முறையிலா மீன்பிடியினை பாரம்பரியமாக தொழில் புரிந்த பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான அனுமதி.**

போன்ற விடயங்கள் இரு தரப்பாலும் எட்டப்பட்டது

மூன்றாவது தடவையாகவும் இலங்கை- இந்திய மீனவர்கள் பேச்சு மாதகல் என்.வி.சுப்பிரமணியம் தலைமை யிலான குழு ஈடுபட்டது. இங்கும் இந்திய மீனவர்கள் சார்பில் கால அவகாசமே கோரப்பட்டது.

கால அவகாசங்கள் மாத்திரம் தீர்வாக முடியாது கால அவகாசம் கோருதல் தொடர்சியாக கால இழுத்தடிப்பை மாத்திரமே நோக்காக கொண்டிருந்ததே ஒழிய, பிரசினைக்கு தீர்வு காணும் எந்த ஒரு புள்ளியையும் நோக்கி நகரவில்லை என்பது தான் உண்மை.

2017ம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பாராளுமன்றில் தனிநபர் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்தார். 2017ம் ஆண்டு 11ம் இலக்கச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. அதில் இலங்கை இறையாண்மைக்குட்பட்ட கடற்பரப்பில் இழுவைப் படகு களை தடைசெய்தும் இழுவைமடித் தொழிலை தடைசெய்து சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் 2018ம் ஆண்டு அப்போதைய அமைச்சர் மஹிந்த அமரவீர இதே 2017ம் ஆண்டு 11ம் இலக்கச்சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்து அரசின் பிரேரணையாக அமைச்சர் பாராளுமன்றில் சமர்ப்பித்தார்.

அத் திருத்தம் வெளிநாட்டுப் படகுகள் மீன்பிடி ஒழுங்குபடுத்தல் சட்டமாக பாராளுமன்றில் நிறைவேற்றப் பட்டு சட்டமாக்கப்பட்டது.

குறித்த சட்டங்களை முறையாக அமுல்படுத் தினாலே இலங்கை- இந்திய மீனவர்கள் பிரச்சினையை கட்டுக்குள் கொண்டு வரப்பட முடியும்.

மேற்குறித்த விடயங்களை ஆராய்ந்து பாரக்கின்ற போது இலங்கை இந்திய கடற்பரப்பு (Sea of Srilanka) இலங்கைக்கே உரித்தான கடல் எல்லை துல்லியமாக வரையறை செய்யப்பட்டுள்ளது. அதற்கான வலுவான சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளது.

ஆகவே இலங்கை - இந்திய மீனவர்கள் தொடர்பான முரண் நிலைக்கு, இலங்கை அரசு நிலையான கொள்கை ஒன்றை உருவாக்கி பிரகடணப்படுத்த வேண்டும். அரசின் நிலையான கொள்கையை மாறிவரும் அரசாங்கங்கள் தமது கட்சி அரசியலைக் கடந்து தேசிய நலன்களை முன் நிறுத்தி சங்கிலித் தொடராக விடயங்களைக் கையாண்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறாக ஆட்சியாளர்கள் மாறினாலும் இலங்கை- இந்திய மீனவர்களின் மீன்பிடி முரண் நிலை மற்றும் இலங்கை - வடக்கு கடல்வளம் தொடர்பாக எடுக்கப் பட்டு வந்த நடவடிக்கைகளை அல்லது பேச்சுக்களை விட்ட இடத்தில் இருந்து மாறிவரும் அரசாங்கமும் தொடர்வதின் மூலமே இரு நாட்டு மீனவர்களின் மீன்படி நடவடிக்கைகளு க்கு சுமூகமான தீர்வை எட்ட முடியும்!

அவ்வாறாக இடம்பெற்றால் வடக்கு கடல் கடல் வளம் மாத்திரமன்றி இலங்கை கடல்வளத்தையும் மீன் உற்பத்தி வங்கியையும் பாதுகாக்க முடியும்.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டிய சட்ட விரோத இரட்டைமடி இழுவைப் படகுகளின் மீன்பிடியைத் தடுத்தால் மாத்திரமே கடல்வளம் பாதுகாக்கப்பட்டு வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தின் தரத்தையும் உயர்த்த முடியும்.

வடக்கு கடல்வளத்தையும், வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்பட்டு தரமுயரமும் பட்சத்தில் மீன்பிடியால் நாட்டிற்கான அந்நியச் செலாவணியை பெற்றுக் கொண்டு நாடும் முன்னேற்றமான தரநிலையை அடையும் என்பதே எனது பார்வை.

**தகவல் சேகரிப்புக்காக** -

**01) இலங்கை கடற்றொழில் நீரியல்வளத் துறை அமைச்சர் - இராமலிங்கம் சந்திரசேகரம்.**

**02) இலங்கை கடற்றொழில் நீரியல்வளத் துறை முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.**

**03) தமிழகம் இராமேஸ்வரம் விசைப்படகுகள் சங்கத் தலைவர் - V.P. சேசுராஜ்**

**04) வடமாகாண கடற்றொழிலாளர் இணைய ஊடகப் பேச்சாளர் - அன்னலிங்கம் அன்னராசா.**

**05) வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் உப தலைவர் - நாகராசா வர்ணகுலசிங்கம்.**

ஆகியோரைத் தொலைபேசி மூலமாகவும் நேரடியாக சென்று சந்தித்து கலந்துரையாடியும் தகவல்கள் பெறப் பட்டுள்ளது.

பிரதான தகவல்கள் பாதிக்கப்பட்ட மீனவர்களுடன் நேரடியாக சென்று உரையாடல்களை மேற்கொண்டு பெறப்பட்டது.

முக்கிய குறிப்பு:- எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பினுள் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களது மீன்பிடி இரட்டைமடி இழுவைப்படகு களையும் (ரோளர்) மீன் பிடி முறைகளையும் பருத்தித்துறை மீனவர்களுடன் படகிற் சென்று நேரடியாக பார்வையிட்டு அறிக்கையிட்டுள்ளதுடன் ஒளிப்படங்கள் மற்றும் காணொ ளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை கடற்கரையில் இருந்து ஒன்பது (9) நோட்டிக் மைல் தூரத்தில் இந்திய மீனவர்களது இரட்டைமடி இழுவைப்படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டிக் கொண்டிருந்ததை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

• • •

## துணை ஜனாதிபதியின் ... தொடர்ச்சி...

மொத்த ஜனநாயகக் கட்டமைப்பிற்கும் இழைக்கப்படும் அநீதியாகும் என்று வலியுறுத்தியிருந்தன.

ஆனால், தற்போதைய சூழலில், தேர்தல்களை நடத்துவதற்குப் பல சாக்குப் போக்குகள் அரசாங்கத்தினால் சொல்லப்படுகின்றன. தித்வா புயல், பொருளாதார நெருக்கடி, சர்வதேச எரிபொருள் விநியோகச் சங்கிலி பாதிப்பு என்று ஒவ்வொரு காலத்திலும் ஒரு காரணம் முன்வைக்கப்படுகிறது.

இந்திய துணை ஜனாதிபதியிடம் மாகாண சபை தேர்தல்களை நடத்துவது குறித்து அரசாங்கம் 'சாதகமான சமிக்ஞைகளை' காட்டியதாகக் கூறப்பட்டாலும், இது ஒரு வழக்கமான இராஜதந்திரப் பதிலுக்கும் மேலாக நடை முறையில் சாத்தியமாகப்போவதில்லை.

இவ்வாறான வாக்குறுதிகள் ஏற்கனவே இந்தியத் தலைவர்களுக்குப் பலமுறை வழங்கப்பட்டு, பின்னர் மறக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் மாகாண சபைகளை முழுமையாக இல்லாது ஒழிப்பதற்கோ அல்லது அவற்றைப் பலவீனப்படுத்துவதற்கோ திட்டமிட்டுச் செயல்படுகிறதா என்ற சந்தேகம் நீடிக்கிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங் கம், தேர்தல்களை நடத்துவதை விட, தங்களின் அரசியல் செல்வாக்கைப் பாதுகாப்பதிலேயே கூடுதல் ஆர்வம் காட்டுவதை இது உறுதிப்படுத்துகிறது.

அந்த வகையில் இந்தியாவின் பார்வையில் இந்த விஜயத்தின் பின்னணியில் உள்ள மற்றொரு மூலோபாய நோக்கம் எரிசக்தி மற்றும் கடல்சார் பாதுகாப்பு சார்ந்த திட்டங்களாகும்.

திருகோணமலையைத் தெற்காசியாவின் எரிபொ ருள் கேந்திரமாக மாற்றுவது மற்றும் இந்தியா - இலங்கை இடையே குழாய் வழி எரிபொருள் விநியோகத் திட்டத்தை முன்னெடுப்பது என்பனவே இந்தியாவின் நீண்டகால இலக்குகளாக உள்ளன.

2015இல் மோடி முன்வைத்த இந்தத் திட்டம், பல்வேறு காரணங்களால் காலதாமதமாகி வந்தது. தற் போது, அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவின் சினோபெக் நிறுவனம் 4 பில்லியன் டொலர் முதலீட்டில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதால், இந்தியா இந்த விவகாரத்தில் மிகுந்த அவசரம் காட்டுகிறது.

கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தின் 51சதவீத பங்குகளை இந்தியாவின் மசகோன் டொக் நிறுவனம் வாங்கியதும், டிரெட்ஜிங் கோர்ப்பரேசன் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளும் தற்செயலானவை அல்ல.

துறைமுகக் கட்டமைப்புகள் மற்றும் கப்பல் பழுதுபார்ப்பு வசதிகளைக் கைப்பற்றுவதன் மூலம், சீனாவின் செல்வாக்கைத் தடுத்து, இந்தியப் பெருங்கடலில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட இந்தியா முயல்கிறது. எனவே, துணை ஜனாதிபதியின் இந்த வருகையானது, இரு நாடுகளுக்கும் இடையிலான மூலோபாய ஒத்துழைப்பின் புதிய பாய்ச்சலுக்கான இந்தியாவின் நாடிபிடித்துப்பார்க்கும் நகர்வாக அமைந்திருக்கிறது.

அதேநேரம், இந்திய துணை ஜனாதிபதி இலங் கைக்கு வருகை தருவதற்கு சரியாக 24 மணித்தியாலங் களுக்கு முன்னதாக கூடியிருந்த அமைச்சரவையானது, கிழக்கு மாகாணத்தில் இந்திய நிதி உதவியின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள ஆறு திட்டங்களுக்கான அனு மதியை அளித்திருந்தது.

இதுவொன்றும் புதிய திட்டங்களில்லை. 2371.83 மில்லியன் ரூபா இந்திய நிதியுதவியில் கிழக்கு மாகா ணத்தில் 33 அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காக இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு 2024ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இந்நிலையில் கடந்த 2025ஆம் ஆண்டு எப்ரலில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி முன்னிலையில் அதற்கான இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும் 33 திட் டங்களில் ஒன்றுகூட முன்நகர்த்தப்படாதிருந்த நிலையில் தான் துணை ஜனாதிபதியின் விஜயத்துக்கு முன்னதாக 6திட்டங்களுக்க இலங்கையின் அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இந்தச் செயற்பாடானது, இந்தியாவை எவ்வாறு சமாளித்துக் கொள்வது என்ற அநுர அரசாங்கத்தின் புரிதலை நன்கு வெளிப்படுத்துகின்றது. அதேபோன்று இந்தியாவின் தேவையும், எதிர்பார்ப்பும் கூட குறித்த அனுமதி தான் என்பதும் முக்கியமாகின்றது.

அந்த வகையில் பார்க்கின்றபோது, இந்தியத் தலைவர்கள் இலங்கை வரும்போது இலங்கை அரசாங் கங்களால் வழக்கமாக வழங்கப்படும் அதே 'சாதகமான வாக்குறுதிகள்' மீண்டும் மீண்டும் வழங்கப்படுகிறது, இது இராஜதந்திரத்தின் சலிப்பான சுழற்சியாகவே இருக்கையில், அது தமிழ் மக்களின் நீண்டகாலக் அபிலாசைகளை எவ்வாறு பூர்த்தி செய்யப்போகின்றது என்பதில் பெருங்கேள்வியை ஏற்படுத்தியுள்ளது.

எவ்வாறாயினும், கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் இந்திய துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களுக்கான குடியுரிமை வழங்கலில் காணப்பட்ட சிக்கல்களை தீர்ப்பதற் கான புதிய வரையறைகளையும், ஆறு தலைமுறைகளுக்கு அதனை நீடித்திருக்கும் அறிவிப்பைச் செய்தமையும் இந்திய வம்சாவழி தமிழ் மக்களின் புதிய விடியலுக்கானதாக கொள்ளலாம்.

மலையக மக்களுக்கான வீட்டுத்திட்டத்தின் மூன்றாம் கட்ட கையளிப்பும், மேலும் பத்தாயிரம் வீட்டுத்திட்ட அறிவிப்பும் மூலோபாய நலன்களைத் தாண்டிய தார்மீகக் கடமையாக கொள்ள முடியும். அதற்கு அப்பால் இந்த விஜயத்தில் 'இந்திய நலன்களை கடந்து' வேறெந்த கனதிகளுமில்லை.

• • •

## தமிழக சட்ட மன்ற ... தொடர்ச்சி...

நடைபெறுவதை உறுதி செய்யத் தேர்தல் ஆணையம் பலநடவடிக்கைகளை மேற்கொண்டது.

தமிழகம் முழுவதும் 75,032 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன.மத்திய படைகள் அதிக அளவில் ஈடுபடுத்தப்பட்டன. ஈரோடு மற்றும் சென்னையில் சில சிறிய அசம்பாவிதங்கள் நடந்தாலும், மொத்தத்தில் தேர்தல் அமைதியாகவே இருந்தது.

EVM மற்றும் VVPAT இயந்திரங்கள் நவீன தொழில் நுட்பத்துடன் பாதுகாக்கப்பட்டன. வாக்குப்பதிவு விவரங்கள் உடனுக்குடன்பதிவேற்றம்செய்யப்பட்டன.

வாக்குப்பதிவு நாளில் ஏற்பட்ட சில தடங்கல்கள், குறிப்பாகப் போக்குவரத்து நெரிசல் மற்றும் சில இடங்களில் வாக்குப்பதிவு இயந்திரக் கோளாறுகள் போன்றவை இருந்த போதிலும், மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

2026 தேர்தலை ஒரு 'Waveless Election' அதாவது, ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு ஆதரவான அலை வீசுவதற்குப் பதிலாக, மக்கள் தங்கள் தேவைகள் மற்றும் உள்ளூர் வேட்பாளர்களின் செயல்பாடுகளை வைத்தே வாக்களித்துள்ளனர் என்று சில ஆய்வாளர்கள் குறிப் பிடுகின்றனர்.

இந்தத் தேர்தலில் திமுக மற்றும் அதிமுக ஆகிய இரு கட்சிகளும் தலா ₹8,000 முதல் ₹10,000 வரைமதிப்பிலான கூப்பன்கள் மற்றும் டோக்கன்களை விநியோகித்ததாகப் புகார்கள் எழுந்துள்ளன. இதுவாக்குப்பதிவு சதவீதம் அதி கரித்ததற்கு ஒரு சமூகக்காரணமாகவும் கூறப்படுகிறது.

சீமானின் நாம் தமிழர் கட்சி (NTK) மற்றும் விஜய்யின் தவெக (TVK) ஆகிய இரண்டு கட்சிகளும் சேர்ந்து சுமாரான வாக்குகளைப் பிரிக்கும் பட்சத்தில், திராவிடக் கட்சிகளின் பாரம்பரிய வாக்கு வங்கியில் பெரும் சரிவு ஏற்படும்.

வாக்களிப்பின் பின்னரான கருத்துக் கணிப்புக்கள் இம்முறை முறையாக வெளிவராத நிலையில் மே நான்காம் நாள் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் வெளிவரும் போதே ஆறு தசாப்தங்களாக நிலவி வரும் இருமுனை அரசியல் போட்டியைத் தாண்டிய பலமுனைப் போட்டியின் பெறுபேறுகள் வெளிச்சத்துக்கு வரும்.

• • •

## அமெரிக்கா தான் ... தொடர்ச்சி...

தன்னிச்சையான போர், ஆனால் ஈரானைப் பொறுத்தவரை இது ஒரு இருப்புக்கே அச்சுறுத்தலான போர்.

இந்த எளிய காரணத்திற்காக, ஈரானுக்கு வலியைத் தாங்கிக்கொள்ளும்சக்தி அதிகம்என்றுநான்நினைக்கிறேன். இது ஒரு பெரிய வித்தியாசம். ஈரான் ஒரு அரசியல் அமைப்பாகத் தனது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளப் போராடுகிறது. அமெரிக்காவோ டொனால்ட் டிரம்பின் மாயையை எதிர்த்துப் போராடுகிறது. அவ்வளவுதான். எனவே, ஈரானில் வலியைத் தாங்கிக்கொள்ளும் சக்தி மிக அதிகம். இதில் சந்தேகமில்லை.

இஸ்ரேல் உண்மையிலேயே அமெரிக்காவைக் கட்டுப்படுத்துகிறதா? இல்லை. சியோனிச லாபியோ அல்லது வேறு யாரோ ட்ரம்புக்கு நேரடியாக ஆணையிடக்கூடிய எந்த அதிகார மையங்களும் இல்லை.

மேலும், அமெரிக்க மக்கள் இந்தப் போருக்கு எதிராக உள்ளனர். எனவே, அரசியல் கண்ணோட்டத்தில், அதாவது பொதுக் கருத்தின் கண்ணோட்டத்தில் பார்த்தால், இந்தப் போருக்கு அமெரிக்காவில் மிகக் குறைந்த ஆதரவே உள்ளது. ட்ரம்பின் ஏற்பு மதிப்பீடுகள் மிக வேகமாகச் சரிந்து வருகின்றன. எண்ணெய் விலை நெருக்கடியின் இந்த தற்போதைய நிலை தொடரும் வரை அவை தொடர்ந்து வீழ்ச்சியடையும்.

ஆகவே, இந்தத் தவறான முயற்சியை முடிவுக்குக் கொண்டுவர டிரம்பிற்கு எல்லா காரணங்களும் திறனும் உள்ளன, மேலும் இஸ்ரேலால் இதைத் தனியாகச் செய்ய முடியாது. அது மிரட்டலாம், ஆனால் ஆயுதங்கள், ஏவுகணை எதிர்ப்புப் பாதுகாப்புகள், செயற்கைக்கோள் உளவுத்துறை மற்றும் எண்ணற்ற பிற வழிகளில் அமெரிக்காவின் நிமிடத்திற்கு நிமிட ஆதரவு இல்லாமல், இஸ்ரேலால் இதைச் செய்ய முடியாது. எனவே, இஸ்ரேல் அமெரிக்காவிற்கு ஆணையிடுவதில்லை. இது டொனால்ட் டிரம்ப் எடுத்த ஒரு முடிவு. அவர் ஒரு தவறான முடிவை எடுத்தார்.

ஈரான் அதிக மீள்திறன் கொண்டது என்பதையும் காட்டியுள்ளது. தன்னிடம் ஒரு முக்கியமான தடுப்பு சக்தி உள்ளது என்பதையும், தனக்கு ஒரு செல்வாக்கு இருக்கிறது என்பதையும்,அச்சுறுத்தல்களாலோஅல்லதுகுண்டுகளாலோ கூட அது எளிதில் பயந்து பின்வாங்காது என்பதையும் ஈரான் காட்டியுள்ளது. மேலும், வளைகுடாப் பகுதியில் உள்ள அமெரிக்காவின் இராணுவத் தளங்கள் யாருக்கும் பாதுகாப்பாக இருப்பதை விட, பிரச்சினைகளை ஈர்க்கும் காந்தங்களாகவே உள்ளன என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, பஹ்ரைன், கத்தார், ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா ஆகிய நாடுகள் இந்தத் தளங்கள் எங்களைப் பாதுகாக்கவில்லை என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

அவை எங்களைப் பாதுகாக்கப் போவதில்லை. அவை பழைய வடிவத்தில் திரும்பி வராது என்று நான் நினைக்கிறேன். எனவே, ஒரு விதத்தில் ஈரான் இன்னும் சக்திவாய்ந்ததாக வெளிவரும். ஈரான் வளைகுடாப் பகுதிகளை ஆக்கிரமிக்கப் போகும் ஒரு விரிவாக்க சக்தி என்று நானும் நினைக்கவில்லை. இது ஈரானின் வரலாறு அல்ல. இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக ஈரான் வேறு எந்த நாட்டையும் ஆக்கிரமித்ததில்லை. எனவே, இதை நான் அமெரிக்காவின் அதிகாரத்தின் எல்லைகளுக்கான ஒரு அளவுகோலாகவே பார்க்கிறேன்.

நான் பல ஆண்டுகளாக விவாதித்து வரும் ஒரு விஷயம் இது. அமெரிக்கா தான் உலகை ஆளுகிறது என்ற எண்ணம் தவறானது. அது ஒரு மாயை. அது ஆபத்தானது. அந்த மாயைகள் நடைமுறைக்கு வரும்போது, அது அனைவருக்கும் இழப்பை ஏற்படுத்துகிறது. அமெரிக்கா எல்லாம் வல்லது அல்ல. அமெரிக்கா பல வல்லரசுகளில் ஒன்று, அது தனித்த ஒன்றல்ல. அமெரிக்கா அதன் அதிகாரத்தில் தனித்துவமானது அல்ல, மேலும் தங்களுக்குக் கட்டளையிடப்படுவதை விரும்பாத உலகின் பிற பகுதிகளுக்கு அமெரிக்காவால் நிபந்தனைகளை விதிக்க முடியாது. எனவே, இதுதான் அடிப்படையில் நாம் கற்றுக்கொள்ளும் பாடம். ஒரு வகையில், இது ஒரு உண்மையை வெளிப்படுத்துகிறது. அந்த உண்மையை அமெரிக்க அரசியல்வாதிகளும், உலகின் பிற பகுதிகளும் புரிந்துகொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

• • •

## வான் தாக்குதலில் இருந்து... தொடர்ச்சி...

வேண்டும், மேலும் 3 விமானம் தாங்கிக் கப்பல்களின் ஆதரவு உள்ளது.

இதன் பொருள், 40 நாட்களில், டோமாஹாக் ஏவு கணைகளின் மொத்த இருப்பில் சுமார் 25% தீர்ந்துவிட்டது, மேலும் அவற்றை மீண்டும் நிரப்புவது மெதுவாகவே நடக்கிறது. தற்போது இதுவே கடற்படையின் பிரதான ஏவுகணையாக இருப்பதால், மேலும் 25-30% தீர்ந்துபோகும்.

வழிகாட்டப்பட்ட ஏவுகணைககளைப் பொறுத்த வரை, இருப்புகள் விரைவாகத் தீர்ந்துவிடும். இதனால், மீதமுள்ள தாக்குதல்களை, கருவிகள் பொருத்தப்பட்ட JDAM குண்டுகளைக் கொண்டு மட்டுமே நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும். இதற்கு விமானங்கள் ஈரானின் உட் பகுதிக்குள் பறக்க வேண்டும். F-15 மற்றும் F-35 விமானங்களை ஈரான் சுட்டு வீழ்த்திய பின்னர் அதன் சாத்தியங்கள் மிகவும் குறைவு.

வளைகுடாவில் உள்ள மூன்று விமானம் தாங்கிக் கப்பல்கள் அதிகமாகத் தோன்றலாம், ஆனால் ஈராக் போரின்போது பயன்படுத்தப்பட்டவற்றில் இது பாதி மட்டுமே. தற்செயலாக, ஈராக்குடனான மற்றொரு ஒற்றுமை என்னவென்றால், 6 விமானம் தாங்கிக் கப்பல்கள் இருந்தும் சதாமின் ஸ்கட் ஏவுகணைகள் ஏவப்படுவதைத் தடுக்க முடியவில்லை. ஒரு சிறிய நிலப்பரப்பான ஏமனில் இருந்து ஏவுகணைகள் ஏவப்படுவதைத் தடுப்பது முடியாததைப் போலவே இதுவும் உள்ளது.

மேலும் இடம்பெற்ற போரில் அமெரிக்க வான்படை ஏறத்தாழ 40 போர் விமானங்களையும் இழந்துள்ளது, போர் விமானங்களுக்கான எரிபொருள் பற்றாக்குறை, போர் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் விமானங்கள் மீதான தாக்குதல்கள், அமெரிக்காவின் முன்னணி தாக்குதல் விமானங்கள் மீதான ஈரானின் ஏவுகணைத் தாக்குதல்கள், ஒரு விமானியை மீட்பதற்காக இழக்கப்பட்ட 14 விமானங்கள், ஏற்கனவே தீர்ந்துபோயுள்ள நீண்டதூர ஏவுகணைகளின் பற்றாக்குறை, ஈரானின் உட்பகுதிக்குள் செல்ல அஞ்சும் விமானங்கள் என்பன தான் அமெரிக்கா வான் போரை விடுத்து கடற்படை முற்றுகைக்கு மாறியதற்கான காரணம்.

அதாவது பேச்சுவார்த்தை மேசையும் உளவியல் நடவடிக்கையும், அதன் எந்தவொரு நோக்கத்தையும் அடை யத் தவறிய ஒரு போருக்கு வெற்றி பெற்ற தோற்றத்தை உருவாக்கும் முயற்சிகளே ஆகும்; இதை ஈரான் நன்கு அறியும்.

• • •

## ஐரோப்பிய ஒன்றியத்தின் ... தொடர்ச்சி...

புதன்கிழமை பிரஸ்ஸல்ஸில் பேசிய ஜோர்ஜென் சன், மத்திய கிழக்கு போர் தொடங்கியதிலிருந்து இந்த அமைப்பின் எரிபொருள் இறக்குமதி செலவு €24 பில்லிய னுக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது என்றும், இது “ஒரு நாளைக்கு €500 மில்லியனுக்கும் மேல்” என்ற அளவில் உள்ளது என்றும் கூறினார். “வரவிருக்கும் மாதங்கள் நிச்சயமற்ற தன்மைகளால் நிறைந்திருக்கும்” என்றும், இந்த நெருக்கடியின் உண்மையான தாக்கம் நீண்டகாலம் நீடிக்கும் என்றும். மேலும், “நாம் எதற்கும் தயாராக இருக்க வேண்டும்” என்றும் அவர் கூறினார்.

உலகம் “மிகப்பெரிய எரிசக்தி நெருக்கடியை” எதிர் கொண்டுள்ளதாகவும், சில வாரங்களுக்குள் ஐரோப்பா வில் ஜெட் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்றும் சர்வதேச எரிசக்தி முகாமை எச்சரித்துள்ளது. “ரஷ்ய வெறுப்பு அரசியல்வாதிகளின்” கீழ் ஐரோப்பிய ஒன்றியம் தொழில்மயமாக்கலை எதிர்கொள்ளும் என்றும், மேற்கத்திய அரசாங்கங்கள் இறுதியில் ரஷ்ய எரிசக்திக்கான அணுகலை மீண்டும் நாட வேண்டிய கட் டாயத்திற்கு உள்ளாகும் என்றும் கிரெம்ளின் தூதர் கிரில் டிமிட்ரியேவ் கூறியுள்ளார்.

## மட்டக்களப்பு: மீனவரை ... தொடர்ச்சி...

சேர்ந்த கடற்படை புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையில் 6 பேர் கொண்ட குழுவினர், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவந்த மீனவரை, சுருக்கு வலை கொண்டு மீன்பிடித்ததாக குற்றம்சாட்டி, கைது செய்ததாக தெரிவிக்கப்படுகிறது

அதேவேளை அந்த மீனவரை அக்குழுவினர் முழங்காலில் இருத்தி, அடித்து சித்திரவதை செய்ததாக பாதிக்கப்பட்ட மீனவர், மனித உரிமை ஆணைக்குழு மற்றும் களு வாஞ்சிக்குடி காவல் நிலையத்தில் முறைப் பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து காவல்துறையினர் குறித்த கடற்படை அதிகாரியை கைது செய்து களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல் செய்தனர்.

இந்த வழக்கை விசாரணைக்கு நீதவான் எடுத்துக் கொண்டபோது வழக்காளி சார் பில் முன்னிலையான சட்டத்தரணி இச்சம்பவம் தொடர்பாக குற்றவியல் கோவை 314இன் கீழ் காவல்துறையினர் வழக்குத் தாக்கல் செய்தது பிழை யானது என்று தெரிவித்தார்.

இதன்படி காவல்துறையினர் 314இன் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். எனவே இந்த வழக்கின் பிரகாரம் கடற்படை அதிகாரியை ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணை யில் விடுவிப்பதாக நீதவான் அறிவித்தார்.





## வடக்கு, கிழக்குமாகாண ... தொடர்ச்சி...

கடந்த நான்கு வருடகால உயர்தர பொறியியல் தொழில்நுட்பப் பிரிவின் பெறுபேறுகளை நோக்கும்போது, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தேசிய மட்டத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது. இதற்குப் பிரதான காரணங்கள்.

- அதிகளவு மாணவர்கள் கலைப்பிரிவைத் தெரிவு செய்தல்.
- கிராமப்புறங்களில் பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் கற்பதற்கான பாடசாலைகள் இல்லை.
- பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் எதிர்கால தொழில் வாய்ப்புகள் பற்றிய போதியளவு அறிவின்மை.
- கலைப்பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்கள், மாணவர்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காக மாணவர்களை தவறான வழியில் நடாத்துதல்.
- பாடசாலைகளில் உயர்தரப் பாடத் தெரிவு தொடர்பான போதியளவு வழிகாட்டல் கிடைக்காமை.

| மாகாணம் | 2025 | | 2024 | | 2023 | | 2022 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் |
| வடக்கு மாகாணம் | 59.12% | 7 | 58.27% | 8 | 60.15% | 8 | 63.47% | 7 |
| கிழக்கு மாகாணம் | 42.20% | 8 | 56.25% | 9 | 56.94% | 9 | 56.25% | 9 |

**அட்டவணை 8.0–வடக்கு, கிழக்கு மாகாணத்தின் பொறியியல் தொழில் நுட்பப்பிரிவு பகுப்பாய்வு - 2022 – 2025**

இதே நிலைதான் உயிர்முறைமை தொழில்நுட்பப் பிரிவில் மாணவர் அடையும், தேசிய மட்டத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது. இதற்கான காரணங்களைக் கண்டறிய உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| மாகாணம் | 2025 | | 2024 | | 2023 | | 2022 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் |
| வடக்கு மாகாணம் | 73.28% | 4 | 72.17% | 7 | 77.41% | 2 | 72.08% | 7 |
| கிழக்கு மாகாணம் | 67.36% | 7 | 69.21% | 9 | 73.29% | 8 | 77.18% | 2 |

பௌதிக விஞ்ஞானப் பிரிவில் இரசாயனவியல் / பௌதிக வியல் பாடத்திற்குப் பதிலாக தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப பாடத்தை தெரிவு செய்த மாணவர்கள் கலைப்பிரிவில் சமூக விஞ்ஞானப் பாடத்தைத் தெரிவு செய்யாமல், ஏனைய பிரிவுப் பாடங்களைத் தெரிவு செய்த மாணவர்களுக்கு ஏனைய துறையின் கீழ் (Other stream / Non Stream) மூலமே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும். கடந்த நான்கு வருட கால பெறுபேற்றை பகுப்பாய்வு செய்யும் போது, வடக்கு கிழக்கு மாகாணம் தேசிய மட்டத்தில், கடைசி நிலையில் இருப்பது கண்கூடு.

| மாகாணம் | 2025 | | 2024 | | 2023 | | 2022 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் | சதவீதம் (%) | தரம் |
| வடக்கு மாகாணம் | 52.91% | 5 | 51.43% | 4 | 51.90% | 1 | 49.21% | 1 |
| கிழக்கு மாகாணம் | 46.74% | 8 | 41.98% | 9 | 37.01% | 9 | 37.43% | 9 |

**ஏனைய பிரிவின் கீழ் பல்கலைக்கழக அனுமதி 2022 – 2025**

2022 – 2025 ஆம் ஆண்டுக்கான பகுப்பாய்வு ஒப்புநோக்கும் போது, வடக்கு கிழக்கு மாகாணம் உயிரியல் விஞ்ஞானத் துறை மற்றும் கலைப்பிரிவில் தேசிய மட்டத்தில் சாதனை படைத்து வந்தாலும், ஏனைய துறைகளில் பின்தங்கி வருகிறது. குறிப்பாக 2022, 2023 ஆம் ஆண்டுகளில் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற வடக்கு, கிழக்கு மாகாணங்கள், 2024 ஆம் ஆண்டில் சற்று வீழ்ச்சி அடைந்தாலும், 2025 ஆம் ஆண்டில் சற்று பெறுபேறுகள் அதிகரித்தமை ஆறுதலான விடயமாகும்.

• • •

## தீபச்செல்வனின் புத்தக ... தொடர்ச்சி...

படுத்துதல் அல்லது குறியீடுகளைக் காட்டுவது குற்றமாகக் கருதப்படுகிறது.

இந்த முன்மொழிவை, தீபச்செல்வனின் புத்தகங்களை தடை செய்ய, சுங்க அதிகாரிகள் கையாண்டிருக்கலாம். "இலங்கைத் தேசிய பாதுகாப்பு" என்ற போர்வையில், தமிழ் தேசிய கோட்பாட்டுச் சிந்தனைகளை தடுக்க சட்டங்கள் மாத்திரம் அல்ல, சட்டங்களுக்கான முன்மொழிவுகளை கூட பயன்படுத்தப்படலாம் என்ற ஆபத்துகள் அநுர அரசாங்கத்தில் தெரிகின்றன. • • •

## தேசத்தைக் காக்கும் ... தொடர்ச்சி...

வெறும் நிலப்பரப்பு உரிமை மாத்திரமின்றி அது நிரந்தர குடியிருப்பு உரிமையாகும். எனவே மலையக அபிவிருத்தி குறித்து பேசும் எந்த அரசாங்கமும் முதலில் காணி உரிமை சட்டத்தை முன்னிலைப்படுத்த வேண்டும்.

### நீலகாமம் சம்பவம் – ஒரு குறியீடு

இந்தச் சம்பவம் ஒரு வீட்டை உடைத்தது பற்றியது மட்டும் அல்ல. அது வீடற்ற மக்களின் அவல நிலையை வெளிக்காட்டுகிறது. காணியற்ற தொழிலாளர் சமூகத்தின் துயரம், நிர்வாக அதிகாரத்தின் துஷ்பிரயோகம் மற்றும் தனியார் வன்முறை அணிகளின் அச்சுறுத்தல் என்பவற்றையும் காட்டுகிறது. மலையக மக்கள் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பியவர்கள். ஆனால் அவர்கள் இன்னும் தமது மண்ணில் உரிமையற்றவர்களாக வாழ வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். நீலகாமம் சம்பவம் போன்றவை நிகழும் வரை, "அபிவிருத்தி", "ஒற்றுமை", "நவீன நாடு" போன்ற சொற்கள் வெறும் அரசியல் விளம்பரங்களாகவே இருக்கும். மலையகத்தில் உண்மையான மாற்றம் வேண்டும் என்றால், காணி உரிமை வழங்கப்பட வேண்டும். அத்துடன் குண்டர் படைகள் கலைக்கப்பட்டு, சட்டம் சமமாக அமுல்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் ஆட்சி மாறியதோடு காட்சியும் மாறியது என்று மக்கள் உணர்வார்கள்.

## இருமடங்கு விலையில் ... தொடர்ச்சி...

சமீபத்திய இறக்குமதிகள், 2025-ஆம் ஆண்டில் இந்தியாவின் ஆண்டு இறக்குமதியான சுமார் 10 மில்லியன் டன்களில் கிட்டத்தட்ட கால் பங்காக அமையும். மோதல் தொடங்கியதிலிருந்து இந்தியாவின் முதல் கொள்முதல் இதுவாகும்.

பிப்ரவரி மாத இறுதியில் அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் மீது போரைத் தொடங்குவதற்கு முன்பு, இந்தியாவின் ராஷ்ட்ரிய கெமிக்கல்ஸ் அண்ட் ஃபெர்டிலைசர்ஸ் நிறுவனம், மேற்குக் கடற்கரை விநியோகத்திற்கு ஒரு டன்னுக்கு 508 டொலர் மற்றும் கிழக்குக் கடற்கரை விநியோகத்திற்கு ஒரு டன்னுக்கு 512 டொலர் என்ற விலையில் ஏலங்களைப் பெற்றதாக ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டது.

இந்தியா உலகின் மிகப்பெரிய யூரியா இறக்குமதியாளராகும், மேலும் அதன் யூரியா உற்பத்தி, முக்கியமாக மத்திய கிழக்கிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இயற்கை எரிவாயுவை பெரிதும் சார்ந்துள்ளது.

## இந்தியாவும் சீனாவும் ... தொடர்ச்சி...

இந்த தேசத்திற்கு அதிக சேதத்தை ஏற்படுத்தியுள்ளனர்,". "எனது பணிவற்ற கருத்தின்படி, மடிக்கணினிகளுடன் கூடிய குண்டர்கள். அவர்கள் நம்மை முழுவதுமாக கொள்ளையடித்து, இரண்டாம் தர குடிமக்களைப் போல நடத்தி, இந்த நாசகார உலகம் வெற்றிபெற அனுமதித்து, நமது கொடியை மிதித்து, இன்னும் பலவற்றைச் செய்துள்ளனர்,". அந்தக் கடிதத்தில், "வெள்ளையின ஆண்கள் வேலைகளுக்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை" என்றும் கூறப்பட்டிருந்தது. மேலும், நிறுவனத்தின் உள்ளக ஆள்சேர்ப்பு முறைகளில் ஆதாரமற்ற பாரபட்சம் இருப்பதாகவும், அவை "இந்தியர்கள் மற்றும் சீனர்களால் நடத்தப்படுகின்றன" என்றும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அமெரிக்காவில் பிறக்கும் சில குழந்தைகளுக்கு பிறப்புரிமைக் குடியுரிமையைக் கட்டுப்படுத்தும் நோக்கில், ட்ரம்ப் ஜனவரி 20, 2025 அன்று ஒரு நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டார். இது, இன்னும் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு வழிவகுத்தது.







இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .




# தாயகமும் வாழ்வும்





